
# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 10: இதழ் 1 டிசம்பர் 1957 விலை சதம்: 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்படம்



மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட மக்கள் பண்டைக்காலந்தொட்டுச் சொல்லொணாக் கஷ்டங்களுக்குள்ளாகியே தம் வாழ்க்கைப் படகை ஓட்டி வந்தார்கள். பழைய வீச்சு வலைகள், புயற்காற்றினால் ஏற்றுண்டு கரை சேரவியலாது தத்தளிக்கும் வள்ளங்கள் ஆகிய இவற்றைக் கொண்டே இரவிரவாக ஆழ்கடலிற் துணிவுடன் சென்று மீன்பிடித்து வந்தார்கள். இவர்கள் சில சமயங்களில் இரவு முழுவதும் நித்திரை விழித்து, கடுங் குளிர்காற்றினாற் றாக்குண்டு விடியற்காலையில் போதிய மீன்களைக் கொண்டுவர முடியாது திரும்பியதுமுண்டு. கரையிலிருந்து வெகு தூரத்தே சென்ற பின்னர் தமக்கு ஏற்பட்ட துன்பங்களைக் கரையிலுள்ளவர்களுக்கு அறிவிக்க முடியாது அல்லலுற்றார்கள். ஆனால் சின்னஞ் சிறு வள்ளங்களிலும் இயந்திரம் பூட்டி அவற்றை இயந்திரப் படகுகளாக உபயோகிக்கும் சகாப்தம் இப்பொழுது ஆரம்பமாகிவிட்டது. கஷ்டப்பட்டு சவள் போட்டு வலித்துக்கொண்டு போகவேண்டிய கவலை இப்பொழுது மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட மக்களுக்குக் கிடையாது.

அன்றியும் மனைவி மக்கள் பட்டினி கிடக்கப் போகின்றார்களே என்ற கவலையின்றிப் போதிய அளவு மீன்களைப் பிடித்து வருவதற்கேற்ற முறையில் இயந்திரப்படகுகளும் வலைகளும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. எனினும் இப்பொழுது அவர்களுக்குப் புதியதொரு கவலை தலைகாட்டத் தொடங்கியது. பெருந் தொகையாகப் பிடித்துவரும் மீன்களை ஒரே நாளில் விற்றுவிட முடியாமல் இருக்கின்றதே என்று யோசிக்கத் தொடங்கினார்கள். அதற்காகத் துறைமுகங்களில் குளிரூட்டிப் பாதுகாக்கும் அறைகளை அரசாங்கம் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. கனடா அரசாங்கத்தின் பண உதவியைக் கொண்டு பாரியதொரு குளிரூட்டும் இயந்திரம் கொழும்பில் முகத்துவாரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இது இங்குள்ள மீன் பிடித் தொழிலாளருக்கு ஒரு வரப்பிரசாதம் என்றுதான் சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுவள்ளங்களிலும் இயந்திரம் பூட்டி அவற்றை ஓட்டுவதற்கு மீன்பிடித் தொழிலாளருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. குருநகரையடுத்துள்ள துறைமுகத்தில் இயந்திரவள்ளம் அலைகளைக் கிழித்துக்கொண்டு உல்லாசமாகச் செல்வதை அட்டைப்படம் காட்டுகின்றது. இயந்திரமின்றி கடற் காற்றை நம்பிப் பாய் விரித்தோடும் படகு ஒன்று ஆமைவேகத்தில் பின் தொடர்கின்றதையும் படப்பிடிப்பாளர் மிக அழகாகப் படம் பிடித்துள்ளார்.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சோஷலிசத்துக்கேற்ற கல்விமுறை வேண்டும் | 3 |
| 2. | நெற்காணி மசோதாவில் செய்யப்பட்ட திருத்தங்கள் | 4 |
| 3. | முகத்துவாரக் கடற்றொழில் நிலையத் திறப்பு வைபவம் | 5 |
| 4. | "நேற்று இன்று நாளை" | 9 |
| 5. | ஈழமும் தேசிய வைத்தியமும் | 14 |
| 6. | கிழக்கு மாகாண ............ புராதன இந்துச் சிவாலயம் | 16 |
| 7. | பாரதியும் பெண்களும் | 20 |
| 8. | ஈழத்தின் அருவிகள் | 25 |
| 9. | கட்டுநாயக்காவும் கைமாறியது | 29 |
| 10. | நடுநிலைமைக் கொள்கையைப் பிரதமர் விளக்குகிறார் | 31 |


J. N. B 897—5,508 (12/57)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோஷலிசத்துக்கேற்ற கல்விமுறை வேண்டும்

## ரோயல் கல்லூரியில் மகா தேசாதிபதி பேச்சு

பழைய நிலப் பிரபுத்துவ முறை ஏறக்குறைய முற்றிலும் ஒழிந்து போய்விட்டது. அதனிடத்தில் சோஷலிஸமும் ஜனநாயகமும் இன்று தழைத்து வருகின்றன" என்று மகாதேசாதிபதி சேர். ஒலிவர் குணத்திலகா 1957 நவம்பர் 30 ந் தேதி ரோயல் கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் நிகழ்த்திய சொற் பொழிவில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நம்மைச் சுற்றியுள்ள உலகை ஒரு தடவை உற்று நோக்கினுல் சமுதாய அமைப்பு முறை எங்கணும் பெரிதும் மாற்றமடைந்து வருவதைக் காணலாம். ஒவ்வொரு நாடும் தனது பொருளாதாரத்தை விருத்திசெய்ய முயல்கிறது. அதன் மூலம் தனது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், மக்களுக்கு சமசந்தர்ப்பங்கள் அளிக்கவும், பரிபூரண தொழில் வசதிகள் செய்து கொடுக்கவும் முயல்கின்றது. இதற்கேற்ப பல நாடுகளில் கல்விமுறையும் மாறுதலடைந்து வருகிறது.

"முன்னர் சலுகைகளுடன் வாழ்ந்து வந்த சிறு கூட்டத்தினர் இப்பொழுது முன்னேறிய நாடுகளில் பொது மக்களுக்கு இடம் விட்டுக்கொடுக்கும்படி நேரிட்டிருக்கிறது. பொது மக்கள் கல்வி பெறவும் தமக்குரிய இடத்தை சமுகத்தில் வகிக்கவும் உரிமை கோரி நிற்கிறார்கள். எமது நாட்டின் சமுதாய அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், கல்வித் துறை மாற்றங்களையும் ஒரு சிறிது உற்றுநோக்குவாம். இரண்டாயிர வருஷங்களாக நமது நாட்டில் பிரிவேனுக்களில் கல்வி பயிற்றப்பட்டுவந்தது. இக் கல்வியை பௌத்தகுருமாரும், ராஜ குடும்பத்தினருமே பெற்று வந்தனர். போர்த்துக்கீசர் வந்த பின்னர் கரையோரப் பட்டினங்களில் பாடசாலைகள் உருவாகின. இது 17 ம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடைபெற்றது. இப்பாடசாலைகளில் விவசாயிகளின் குழந்தைகள் சிலர் சேர்ந்து கல்வி கற்க ஆரம்பித்தார்கள். இவர்கள் போர்த்துக்கீசர் கீழ் இலிகிதர்களாகக் கடமையாற்றினர். அதன்பின் பிரிட்டிஷார் நிறுவிய கல்வித் திட்டத்தின் பிரதான நோக்கம் ஆங்கில மொழியில் நல்லதேர்ச்சி பெற்றவர்களைச் சிருஷ்டித்து அவர்களை அரசாங்கசேவையிற் சேர்த்துக் கொள்ளலாகும்.

"இத்திட்டத்தின் பயனுக இரு வகுப்புகள் இலங்கையில் தோன்றின. ஒரு வகுப்பு ஆங்கிலக் கல்வி பெற்ற வகுப்பு. அரசாங்க வர்த்தகத் துறைகளில் நல்ல உத்தியோகங்களெல்லாம் அவர்களுக்கே கிடைத்தன. மற்றது சுயபாஷை கற்ற வகுப்பு. இவர்கள் சிறு ஊழியங்களுடன் திருப்தியடைய வேண்டியிருந்தது. ஆங்கிலப் பாடசாலைகள் நகர்ப் புறங்களிலேயே இருந்தன. இதனுல் கிராமிய இளைஞர்களுக்கு உயர்தரக் கல்வி பெறுவதற்கு வசதிகள் இல்லாது போயிற்று. மிகவும் புத்திசாலியான இளைஞனுய் இருந்தாலும் கல்வி பெறும் வசதியில்லாது இன்னலுறவேண்டியிருந்தது. இதனுல் இரு சமுதாய வகுப்புகள் தோன்றி அவற்றுக் கிடையே போராட்டம் முகிழ்க்கலாயிற்று. ஒரு வகுப்பு நகர்ப் புறத்தில் வசிக்கும் ஆங்கிலங்கற்ற மேல்-கீழ் மத்திய வகுப்பு. மற்றது கிராமப் புறத்திலுள்ள சுயபாஷை கற்ற ஏழை வகுப்பு. நகர்ப் புறத்திலுள்ள ஆங்கிலங் கற்பிக்கும் பாடசாலைகளில் மிகவும் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் அநேகர் கல்வி கற்பித்தனர். கிராமப் புறங்களிலுள்ள பாடசாலைகளிலோ அவ்வாறிருக்கவில்லை.

"சுதந்திரக் கோரிக்கை நாட்டில் கிளம்பியபோது அதனேடு 85 சதவீதமான மக்களின் சம சந்தர்ப்பக் கோரிக்கையும் இணைந்திருந்தது. மக்கள் அந்நிய ஆட்சி ஒழிந்தால் போதுமென மட்டும் எண்ணவில்லை. சலுகைகள் பெற்ற ஒரு சாரார் தம்மீது ஆட்சி செலுத்துவதையும் அவர்கள் விரும்பவில்லை. இதனுல் சமுதாய அமைப்பை மாற்ற வேண்டியிருந்தது. இத் துறையில் 1943 ம் ஆண்டில் நாட்டில் இலவசக் கல்வியைப் புகுத்தியது முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். இது சம்பந்தமாக நிதிக் காரியதரிசி என்ற முறையில் நானும் எனது பங்கை நிறைவேற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. அதற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனுயிருக்கிறேன். இலவசக் கல்வி ஜனநாயக வாழ்க்கை முறைக்கு ஓர் ஆரம்பமாயிற்று. மாணவர்கள் மத்திய பாடசாலைகளிலும் இதர இலவச பாடசாலைகளிலும் ஏராளமாகச் சேர்ந்து கல்வி கற்றனர். இவர்களில் பலர் இன்று நல்ல நிலைகளில் இருக்கிறார்கள். கடந்த பல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களில் 35 சதவீதமானவர்கள் மத்திய பாடசாலையில் கல்வி கற்றவர்களே.

"ஆனுல் இதனுல் நிலைமை முற்றிலும் மாறிவிடவில்லை. ஆங்கிலக் கல்வியில்லாதவர்கள் சிறந்த உத்தியோகம் பெறுவது இன்னும் கஷ்டமாகவே யிருந்தது. மேலும் சுதந்திர நாடு தனது சொந்த மொழிக்கும், கலைக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்பதும் உணரப்பட்டது. ஆகவே அடுத்த

(31 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்காணி மசோதாவில் செய்யப்பட்ட திருத்தங்கள்

நவம்பர் மாதம் 18 ந் திகதி மந்திரிசபையால் திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட நெற்காணி மசோதா கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டது.

(மசோதா இரண்டாம் முறை அடுத்த பாராளு மன்றக் கூட்டத்தில் வாசிக்கப்படும்).

கீழ்க்காணும் திருத்தங்கள் மசோதாவில் இடம் பெற்றன :

**1. நஷ்ட ஈடு**

அரசாங்கம் ஒரு வயற்காணியை வாங்கும்பொழுது அக்காணியின் 10 வருட வாடகைப் பணத்தின் பெறுமதியை நஷ்ட ஈடாக வழங்கவேண்டும்.

முன்னைய நகல் மசோதாவில் இத்தொகை வரை யறுக்கப்பட்டிருக்கவில்லை.

**2. சொந்தக்காணி விவசாயிகள்**

வாரக்குடிகளைக் கொண்டு வயல் நிலங்களைப் பயிர் செய்விக்கும் நிலச்சுவான்தார் ஐந்து வருடங் களுக்குள் சொந்தக்காணி விவசாயியாவதைப் பற் றித் தீர்மானிக்க வேண்டுமென முன்னைய நகல் மசோதாவில் குறிப்பிடப்பட்டிருந்தது. இத்துடன் சொந்தக் காணி விவசாயி பராயமடையாதிருந்தால் (மைனர்) ஐந்து வருடங்கள் கழிந்தபோதிலும் பராய மடைந்தபின் இது பற்றித் தீர்மானிக்க மேலும் 6 மாதகாலம் சந்தர்ப்பமளிக்கப்படுவாரென திருத்த மசோதா குறிப்பிடுகின்றது.

வாரக்குடி தனக்குப் பின்சந்ததியின்றி மரண மடைந்தபொழுதும், வாரக்குடி ஒழுங்காகப் பயிர் செய்யாததற்காக விலக்கப்பட்ட பொழுதும், காணிச் சொந்தக்காரர், சொந்தக்காணி விவசாயியாகத் தீர் மானிக்க முடியும்.

**3. வாரக்குடிகள்**

நெற்காணி யொன்றை அரசாங்கம் வாங்கும் பொழுது, அதன் வாரக்குடி தொடர்ந்து அக்காணி யின் வாரக்குடியாக விருப்பார். வாரக்குடியில்லாத காணிகளுக்கு, விவசாயக் கமிட்டி தகுந்த வாரக் குடியைத் தேர்ந்தெடுக்கும்.

முன்னைய நகல் மசோதாவில் இத்தகைய காணி கள் விவசாயக் கமிட்டியின் அதிகாரத்துக்கு மாற்றப் படுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

**4. கூலித்தொழிலாளர்களைக் கொண்டு பயிர் செய் யப்படும் காணிகள்**

1956 ம் ஆண்டு எப்ரல் மாதம் 12 ந் தேதிக்கு முன் கூலித் தொழிலாளர்களைக் கொண்டு பயிரிடப் பட்ட காணிகளை, அதன் சொந்தக்காரர் நன்கு பயிரிடுகிறார்களென விவசாயச் சேவை அதிபர் திருப்தி யடைந்தால், அக்காணிகள் முன்னைய நகல் மசோ தாவின் 15 ம் 16 ம் பிரிவுகளிலடங்கா.

முன்னைய நகல் மசோதாவின் 15 ம் பிரிவின்படி வாரக்குடிகளில்லாத காணிகளுக்கும், பயிர் செய்யப் படாத காணிகளுக்கும் தேவையான வாரக்குடிகளை நியமிக்கும், அல்லது தானே பயிரிடும் பொறுப்பை யேற்கும் அதிகாரம் விவசாயக் கமிட்டிக்கு வழங்கப் பட்டிருந்தது.

முன்னைய நகல் மசோதாவின் 16 ம் பிரிவின்படி வயற்காணிகளைப் பயிரிட்ட தொழிலாளர்கள் வாரக் குடிகளாக நியமிக்கப்படவிருந்தனர்.

**5. வயற்காணிகளை விற்பனை செய்தல்**

வயற்காணிச் சொந்தக்காரர் தனது நெற் காணியை அரசாங்கத்திற்கு விற்பனை செய்ய முன்வருமிடத்து, மேற்குறித்த காணியை விற்பதன் காரணம், விதிக் கப்பட்ட காரணங்களிலடங்குமா என்பதை விவசாயச் சேவை அதிபர் தீர்மானிப்பார். விண்ணப்பதா ரிக்கு அதிபரின் தீர்மானம் அதிருப்தி அளிக்கு மிடத்து, அவர் பரிசீலனைச் சபைக்கு அப்பீல் செய்ய உரித்துடையவராவர்.

**6. நெற்காணிகளைத் தவறான முறையில் உபயோ கித்தல்**

பயிர்ச்செய்கை தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்கு, உதாரணமாக கட்டடங்களை நிறுவுவதற்கு, நெற் காணிகளை உபயோகித்தல் குற்றமாகும்.

**7. இலங்கையரல்லாதாருக்கு காணிகளைப் பராதீனப் படுத்தல் செல்லுபடியாகாது**


ஒரு நெற்காணிச் சொந்தக்காரர், விவசாயச்சேவை அதிபரின் அங்கீகாரத்தைப் பெறாது, இலங்கைய ரல்லாத ஒருவருக்கு நெற்காணியைப் பராதீனப்படுத் தல் செல்லுபடியாகாது.

**8. பரிசீலனைச் சபைக்கு அப்பீல் செய்தல்**

விவசாயச் சேவை அதிபரின் தீர்மானங்களுக்கு மாறாகச் செய்யப்படும் சகல அப்பீல்களும் (விண்

(30 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீன் பாதுகாக்கப்படும் குளிர் உறை, உபபொருட்கள் முதலியனவுள்ள கட்டிடம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து பார்க்கும்போது இவ்வாறு காட்சியளிக்கிறது.

# முகத்துவாரக் கடற்றொழில் நிலையத் திறப்பு வைபவம்


முகத்துவாரத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் கடற்றொழில் நிலையத்தை மகாதேசாதிபதி சர். ஒலிவர் குணதிலக்கா திறந்துவைத்தார். இந் நிலையத்தை கனடா அரசாங்கம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்நிலையத்தைத் திறந்து வைத்த மகா தேசாதிபதியவர்கள் "இலங்கை மக்களுக்கு கனடா நன்கொடையாக வழங்கிய முகத்துவாரக் கடற்றொழில் நிலையத்தைத் திறந்து வைப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கைக்கு கனடா தொடர்ந்து அளித்துவரும் அளப்பரிய உதவிகளுக்கு இது சிறந்ததோர் உதாரணமாகும்" எனக்குறிப்பிட்டார்.

சர். ஒலிவர் மேலும் பேசுகையில், "இத்திட்டத்தில் கடற்றொழிற் துறைமுகமும் இறங்கு துறைப் பாலமும், குளிரூட்டும் இயந்திரமும், மீன்பொருட் தொழிற்சாலையும் அடங்கும். கடற்றொழில் நிலையத்துக்கான உள்ளூர்ப் பொருட்களுக்கும், தொழிலாளர்களுக்கும் தவிர்ந்த ஏனைய செலவுகளை கனடிய அரசாங்கம் பொறுத்தது. குளிரூட்டும் கருவி மிகவும் நவீன முறையிலமைந்ததாகும். இவ்விதமான நவீன கருவிகள் கனடாவிலும் சிலவே யுள்ளன. இந்நிலையத்தை அமைக்கும் வேலை கனடிய நிபுணர்களின் மேற்பார்வையில் நடைபெற்றது. இதில் பங்குபற்றிய எல்லா கனடியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மீன் பொருள் தயாரிப்பு இயந்திரத்திற்கான கட்டடமும், ஆயுதக்கடையும், பண்டகசாலையும் இலங்கை அரசாங்கத்தின் நிதியைக் கொண்டு அமைக்கப்பட்டன. கனடா இவைகளுக்குத் தேவையான இயந்திரங்களை வழங்கியது. கருவாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



◀ குளிர்ச் சேமிப்புப் பெட்டிகளின் தட்டு களிலிருந்து ஐஸ் இட்ட மீன் எடுக்கப் படுங் காட்சி.


▼ குளிர் அறைகளில் மீன்கள் அடுக்கி வைக்கப்படும் விதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



▲ மீன்கள் கழுவிச் சுத்தமாக்கப்படுகின்றன.



ஐஸ் இடப்படுமுன்பு மீன்கள் குளிர்ப் பெட்டிகளின் தட்டுகளில் அடுக்கிவைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தயாரிக்கும் இயந்திரம், சுறுமீன் எண்ணெய் தயாரிப்பு இயந்திரம், மீன்பசளை தயாரிக்கும் இயந்திரம், மீன்களை டின்களில் அடைப்பதற்கான பரீட்சை இயந்திரம், வேலைத்தளத்திற்கான இயந்திரங்கள் முதலியன வழங்கப்பட்டிருக்கின்றன.

கொழும்புத் திட்ட உதவித் திட்டத்தின் கீழ் திரு. கிரேன் அவர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது. இவர் இயந்திரத்தை இயக்குமுறையை உள்ளூர் உத்தியோகத்தர்களுக்குப் போதிப்பார். கனடாவிலிருந்து திரு. பார்ப் என்னும் இன்னுமோர் நிபுணரின் உதவியும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

கொழும்புத் திட்டத்தின்கீழ் வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட உதவிகளில் 60 சத வீதமான உதவி கனடாவிடமிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டது. கனடாவிடமிருந்து 1951 ம் ஆண்டு முதல் 1957 ம் ஆண்டு வரை 5 கோடியே 20 லட்சம் ரூபா பெறப்பட்டது. இவ்வுதவியைப் பெற உதவியாயிருந்தவர்களில் இருவரினது பெயரை நாம் மறக்கமுடியாது. இந்நாடு முன்னுள் கனடிய பிரதமர் திரு. சென்ற் லோறண்ட் அவர்களை என்றும் மறவாது. மற்றவர் நமது கனடிய ஸ்தானிகர் திரு. ஜே. ஜே. ஹார்லி அவர்களாவர்.

திரு. ராஜூ குமாரசாமி இத்துறையில் செய்த சேவையை நாம் இன்றைய தினத்தில் மறந்துவிடக் கூடாது. இலங்கை சர்வதேச நாணய நிதியிலிருந்து எப்பொழுதும் உதவி பெறவில்லை. 1954 ம் ஆண்டு நமது வங்கி விகிதம் $2\frac{1}{2}$ சதவீதமாக விருந்தது. நமது திறைசேரி, 1 சதவீதத்திற்கு சிறிது மேலான விகிதத்தில் கடன் கொடுக்கிறது. 1953 ம் ஆண்டோடு ஒப்பிடும் பொழுது வாழ்க்கைச் செலவு 2 சதவீதமாக உயர்ந்துள்ளது. நமது மகா வங்கியின் சர்வதேச வைப்புநிதி, நமது மொத்த நாணயச் செலாவணியின் 136 சதவீதமாகும். 1953 ம் ஆண்டு இறுதியில் 39 கோடி ரூபா சேமிப்பு, 1957 ம் ஆண்டு ஆகஸ்டு முடிவில் 57 கோடி ரூபாவாக உயர்ந்திருப்பது நமது நாணயச் செலாவணியில் பொதுமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை வலியுறுத்துகின்றது. சுதந்திரமடைந்து ஒன்பது வருடங்களாகிவிட்டன. இக்காலத்தில் நாம் நமது நிதிக் கொள்கைகளில் சிறிது மாறுது மிகவும் கவனமாகச் செல்கின்றோம். நம் மக்களின் சந்தோஷம்

(28 ம் பக்கம் பார்க்க)



முகத்துவார மீன்பிடித் துறைமுகம் ஆகாயத்திலிருந்து பார்க்கும்போது இவ்வாறு காட்சியளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நேற்று இன்று நாளை"

(கலை விழா நாடகம்)

சில்லையூர் செல்வராசன்

## "நேற்று நடந்தது"

இடம் : தேவலோகம்

காலம் : பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்

பாத்திரங்கள் : பரமசிவன், பார்வதி, விஷ்ணு, பிரம்மா.

(பரமசிவனும் பார்வதியும் அமர்ந்திருக்கிறார்கள். உலகிலிருந்து, பஞ்சத்தால் வாடும் பலர் அபயங் கோரி எழுப்பும் தீனப் பாடல் காற்றில் மிதந்து வருகிறது)

**என்னபிழை செய்திருந்த போதுமையா,**
**ஏழைகள் மேற் கருணைவைத்து இரங்கியாண்டு,**
**அன்ன பிழை தனையகற்றி, அடியரெம்மை**
**அல்லல் செயும் பசிப்பிணியை அகற்றீர் தேவா!**

**காய்ந்த மனத்தவர்க்கிருளாய்க் காணுறாத**
**கதிர்ச்சுடரே, பரவொளியே, கதியிலேமை**
**தேய்ந்திடுதற் கினும் விடுதல் சிறப்போ? எங்கள்**
**தெய்வமே, திருக் கடைக்கண் சிறிது நல்காய்!**

**பார்வ :** சுவாமி, இது என்ன அபயக் குரல்?

**சிவன் :** பார்வதி, தமிழ் நாட்டுப் பெரு மக்கள் பஞ்சத்தால் வாடித் தங்கள் பசிப்பிணியைப் போக்குமாறு என் பாதம் பரவிப் பாடும் ஓசை, அது. வானம் மிகப் பொய்த்து, மாரி வளங் குன்றியதால், தேனுறைத்த என் தேசம், தீனியின்றித் தேய்கிறது.

**பார்வ :** தமிழ்த் திரு நாட்டிலா பஞ்சம்? சுவாமி, தென்னாடுடைய சிவனே என்று எந்நாட்டவ ரும் சொல்வார்களே. தங்கள் நாட்டிலேயே பஞ்சமென்றால் ..........

**சிவன் :** அவமானம் தேவி, அவமானம். பார் பார் வதி, கேவலம், மானிடர்களே தங்கள் கடமை யிற் தவறாமல், ஓவாப் பசிப்பிணி வந்துற்ற போதும், ஓயாது இறைவனை இறைஞ்ச, தேவர் கள் மட்டும் தங்கள் கடமையிற் தவறிவிடுகிறார் கள்.

**பார்வ :** (நகைத்து) என்ன சுவாமி இது? தாங் களே தங்களைக் குறைசொல்கிறீர்களே?

**சிவன் :** என்ன? நானா என் கடமையிற் தவறிவிட் டேன்? காத்தற் கடவுளான விஷ்ணுவல்லவா கடமை தவறி விட்டதாகச் சொன்னேன். நீண்ட புவி காக்கும் திருமாலே, நியமந்தவறினால்....

**விஷ் :** (உள்ளே வந்த வண்ணம்) மன்னிக்க வேண் டும் பிரபு. என்னைப்பற்றித்தான் ஏதோ பேச்சு நடக்கிறாற் போலிருக்கிறதே?

**சிவன் :** வருக நெடுமாலே, உம்மைப் பற்றித்தான் உள்ளக்கசப்புடன் பேசியிருந்தோம்.

**விஷ் :** உள்ளக் கசப்புடனா? என்ன பிரபு. அப்படி என்ன தவறு செய்துவிட்டேன் நான்?

**பார்வ :** பரமாத்ம, தமிழ் நாட்டிலே கடும் பஞ்சத் தால் மக்கள் வாடுகிறார்கள். வானுலகை நோ க்கி அவர்களின் அபயக்குரல் வந்த வண்ணமே யிருக்கிறது..........

**சிவன் :** (சிறிது கோபமாக) மகாவிஷ்ணு, என் இனிய நாட்டில் வாழ் இவ்வுயிர்கள் நோவாது காக்கும் வினை தவறி, கழுவாய் நீர் தேடிய தேன்?

**விஷ் :** ருத்திர மூர்த்தி, என் தொழிலில் இம்மி யுங் குறையில்லை. பூவுலகில் உள்ள பொருட் களைக் கொண்டே எனது காத்தல் தொழில் நடைபெறுகிறது. இல்லாததை ஆக்குவதும், உள்ளதை அழிப்பதும் என்னால் இயலுமா? அது பூ வாழ் அயனுக்கும், புண்ணியனாந் தங்களுக்கும் வாய்த்த வல்லமைகளல்லவா? நான் என்ன செய்வேன் நுதற் கண்ணா? வாய்த்த பொருட்களினால் வையத்தைக் காக் கின்றேன். மலருறையும் பிரம்மா வகுத்தவற் றுள், ஒன்றுகி, மாந்தர் மனக் குறையை மாற் றும் பொருளில்லை. ஆதலினாலே, குற்றம் அந்த அயன் மேலே!

**பிரம் :** (உள்ளே வந்த வண்ணம்) குற்றம் என்ன செய்தேன் நற்தேவா? கூறுங்கள்.

**பார்வ :** பிரம்மதேவ, தமிழகம்பஞ்சத்தால் வரண்டு பரதவிக்கிறது. அதைக் காக்கத் தவறியது தன் கழுவாயல்ல என்று கை கழுவுகிறார் திருமால். பஞ்சத்தைப் போக்கும் பண்புகள் அத்தனையும் கொண்ட ஒரே பொருளாக எதுவும் தங்கள் படைப்பில் இல்லை என்பது அவர் குற்றச்சாட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவன் :** என்ன காரியஞ் செய்தீர் சிருஷ்டி தேவா ? உமது படைப்புத் தொழிலின் பண்பு இதுதானு ?

**பிரம் :** அண்டர் பிரானே, அடியேன் அறிந்தவற்றை எல்லாம் மண்ணுலகில் ஆக்கி வைத்தேன். இந்த இந்திரபுரியிலுள்ள பொருட்களில் பிரத்தியேகமானவற்றைத் தவிர, மற்ற யாவற்றையும் அம்புவியில் படைத்தேன். ஆயினும், சகல முக்கிய தேவைகளையும் தீர்க்கும் ஒரே பொருளாக எதுவும் வையத்தில் இல்லை.

**சிவன் :** பதுமபதி, அதைத் தானே திருமாலும் குறையாக எடுத்துச் சொல்கிருர்......

**பார்வ :** வாதப் பிரதிவாதங்கள் போதும் சுவாமி. தப்பு யாருடையது என்று ஆராய்ந்து பயன் என்ன ? தமிழகத்தின் பஞ்சம் தீர மார்க்கம் பாருங்கள். அவர்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய ஒரே பொருள் எது ? அதை ஆலோசியுங்கள்.

**சிவன் :** மலரோனே, படைத்தல் உமது தொழில்....

**பிரம் :** உமையொரு பாக, எனக்கு ஒரு வழியும் தோன்றவில்லையே........

**பார்வ :** நான் வழி சொல்கிறேன் பிரம்மதேவ. உம்பர் உலகத்துக் கற்பக தரு, கேட்டதெல்லாம் தருவதில் கீர்த்தி படைத்ததாயிற்றே. அதைப் போன்று......

**சிவன் :** அருமையான யோசனை தேவி. பிரம்ம தேவ, தமிழ் நாட்டின் வளம் பெருக, கற்பக தருவை அங்கு படைத்தருளும்.

**பிரம் :** அப்படியே பிரபு. இதோ, (கையை உயர்த்தி) தமிழகத்தில் கற்பகதரு தோன்றி பல்கிப் பெருகிப் பயனளித்துப் பலகாலம் வாழட்டும்.

**சிவன் :** முத்தமிழ் நாட்டின் மூன்று பகுதிகளில், பனை என்ற பெயருடன் இக்கற்பகதரு நிலை பெற்று, இது நிலைக்கும் மூன்று தமிழ்ப் பகுதிகளும், பனையூர், பனங்காட்டூர், பனந்தரையூர் என்று பெயர் பெறட்டும்.

**விஷ் :** இட்ட அளவிலேயே பயன் தர ஆரம்பித்து, தமிழகத்தின் பஞ்சத்தைப்பனை உடனேயே அழிக்குமாக.

(திரை)

**"இன்று நடக்கின்றது"**

இடம் : தேவலோகம்.

காலம் : 1957 ம் ஆண்டு.

பாத்திரங்கள் : பார்வதி, பரமசிவன், பிரம்மா, விஷ்ணு.

(பார்வதி பரமசிவன், பிரம்மா மூவரும் பேசிக் கொண்டிருக்கிருர்கள்)

**சிவன் :** பிரம்ம தேவ, திருமாலைச் சில தினங்களாகக் காணேமே ? எங்கே ?

**பிரம் :** அரனே, காத்தற் கடவுள் பூவுலகைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டுச் சென்றிருக்கிருர்.

**சிவன் :** பூவுலகின் எந்தப் பாகத்தையோ ?

**பிரம் :** நுதற் கண்ணு ! பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டில் பனை என்ற பூலோக கற்பக தருவை யான் படைத்தது ஞாபகமிருக்கிறதா ?

**பார்வ :** இல்லாமற் போகுமா ? தமிழ் நாட்டு மக்களின் வாழ்வுடன் பனை இரண்டறக் கலந்து விட்ட தன்மை பற்றித் தான் அவ்வப்போது அவர் பெரிதாகப் பேசி வருகிருரே.

**சிவன் :** தமிழ் நாட்டு மக்களின் அன்ருட வாழ்க்கையில் உணவுத் துறையில் மட்டுமன்றி, அத்தியாவசிய பொருட் தேவையிலும், இலக்கியத்திலும் சைவத்திலும் இதர கலைத்துறைகளிலும் கூட எத்தகைய பிரிக்க முடியாத கலப்பும் செல்வாக்கும் பெற்றுவிட்டது பனை. ஆமாம். மகா விஷ்ணு தமிழக தரிசனத்துக்குத் தான் போயிருக்கிருரா ?

**பிரம் :** ஆம் பிரபு. இருந்தாற்போல, மானிட கணக்குப்படி இந்த 57 ம் ஆண்டில் தமிழகத்தில் பனை மரத்தின் நிலை எப்படியிருக்கிறது என்று பார்த்துவர ஆசை வந்துவிட்டது அவருக்கு.

**பார்வ :** பாருங்கள் பிரம்மதேவ, தமிழகத்தில் அன்று வாழ்ந்த திருவள்ளுவர் தொடக்கம் இன்று வாழும் பாரதிதாசன் வரை, எத்தனை புலவர்கள் பனையைப் பற்றி எப்படி எப்படியெல்லாம் ஏற்றிப் போற்றியிருக்கிருர்கள்.

**சிவன்:** பிரம்மதேவ, பார்வதி தேவிக்குத் தமிழ்க் கவிதை என்ருல் (நகைத்து) ஒரு பித்து. நல்ல தமிழ்க்கவிதை என்ருல், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று புலவர்களைத் தரம் பிரித்துப் பார்க்க மாட்டார். உம் ; சொல்லுங்கள் தேவியாரே, உங்கள் கவிதா ரசனையையும் கொஞ்சங் கேட்கலாம்.

**பார்வ :** (நாணி) போங்கள் சுவாமி.

**பார்வ :** மாதொரு பாக, தேவியிற் தப்பில்லையே. பனையின் சிறப்பு பற்றிய பாட்டென்ருல், அது எங்கள் சிறப்பையும் பற்றியதல்லவா ? அதில் தோஷம் எப்படியிருக்கும் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவன் :** நீர் அப்படித் தான சொல்லுவீர். என்ன இருந்தாலும் உம்முடைய சிருஷ்டியல்லவா பனே ?

**பார்வ :** "தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக் கொள்வர் பயன் தெரிவார்" என்று உயர்வுக்கும் சிறப்புக்கும் எல்லை காட்டப் பனை யைப் பயன் படுத்துகிருர் வள்ளுவர்.

**பிரம் :** இட்ட போதே பயன் தரத் தொடங்கட்டும் என்று பனையை நான் சிருஷ்டித்த போதே மாகாவிஷ்ணு வாழ்த்தியது, எப்படிப்பலித்து விட்டது பாருங்கள் பிரானே.

**சிவன் :** அதைத்தான் "இட்ட ஞான்றிட்டதே" என்று நாலடி நயம்படச் சொல்லுகிறதே. தவிர வும் நட்ட நாள் தொட்டு, ஒவ்வொரு பருவத்தி லும் ஆயிரம் பயன் தந்து, பட்டபிறகும் ஆயிரம் பயன் தருவதல்லவா பனை; பனை நட்டாயிரம், பட்டாயிரம் என்று பழமொழிகூட உண்டே தமிழில்.

**பிரம் :** ஆமாம் பிரபு. எனக்கு ஒரு சம்பவம் ஞாப கத்துக்கு வருகிறது. சோழன் நலங்கிள்ளி என்ற தமிழ் அரசனின் சேனை எவ்வளவு பெரி யதென்பதை ஆலத்தூர் கிழார் என்ற புலவர் அழகான ஒரு பாடலில் சொல்லுகிருர். நலங் கிள்ளியின் படை ஒரு பனம் பொழிலைக் கடந்து சென்றதாம். அப்படையில் முதலில் சென்ற வர்கள் பனையின் நுங்கை அருந்திச் சென்ற னராம். இடையில் சென்றவர் பனம் பழத் தைச் சாப்பிட்டுச் சென்றனராம். கடைசியில் சென்றவர் பனங் கிழங்கைச் சாப்பிட்டுப் போனர் களாம். படையின் சிறப்புடன் பருவத்துக்குப் பருவம் வெவ்வேறு பயன் தரும் பனையின் சிறப்பையும் கூறுகிறதல்லவா இது பற்றிய பாடல் ?

**பார்வ :** இன்னென்று கேளுங்கள். உலகில் தண் ணீரோ தாபரிப்போ இல்லாமல், தானக வள ர்ந்து தலையாற் பயன் தரும் தாவரம் பனை யொன்றே என்று பாரதிதாசன் பாடல் சொல் கிறது :

ஊர் ஏரிக் கரை தனிலே என் இளமைப் பரு
வத்தில் இட்ட கொட்டை,
நீரேதும் காப்பேதும் கேளாமல் நீண்டுயர்ந்து
பல்லாண்டின் பின்,
வாராய் என்றெனை ஓலை விசிறியினல் வர
வேற்று நுங்கும் சாறும்,
சீராகத் தந்ததெனிற் பனை போலும் நட்பு
முறை தெரிந்தார் உண்டோ?

என்று அவர் பாடுகிருர்.

**சிவன் :** நாலடியும், நன்னூலும், புறநானூறும் அகநானூறும், தொல்காப்பியமும், சிலப்பதி காரமும், வெற்றிவேற்கையும், தஞ்சைவாணன் கோவையும், கோவையும், குறளும், வெண்பா மாலையும், நீதிவெண்பாவும், பெரும் பாணாற்றுப்படையும், கலித்தொகையும், பதிற் றுப்பத்தும், சிந்தாமணியும், முத்தொள்ளாயி ரமும், பரிபாடலும், பெருங்கதையும், திருவெங் கைக்கோதையும், கம்பன் பாட்டும்.........

**பார்வ :** போதும் சுவாமி, மூச்சுத் திணறப் போகிறது.................

**சிவன் :** இன்னும் அநேக தமிழ்க் காப்பியங்களும் தனிப்பாடல்களும் பனையைச் சம்பந்தப்படுத்திப் பாடுகின்றனவே.

**பிரம் : தால விலாசத்தை** மறந்து விட்டீர்களே பிரபு. பனையின் பெருமையைத் தனியாகக் கூறும் பெருநூலல்லவா அது. அந்நூல் அழிந்து போனதும், தாங்கள் எலும்பைப் பெண்ணுக் கியதுபோல மீண்டும் ஒரு புதிய தால விலாசத் தை **யாழ்ப்பாணத்து மகாகவிஞர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர்** ஆக்கியளித்ததும் தாங்கள் அறியாததா ? இன்னும் **பனைப் புராணம், பனையரசன் நாடகம்** போன்ற தனி நூல்கள் **யாழப்பாணத்தில்** வழங்கி வந்ததும் தாங்கள் மறந்த சங்கதிகளா ?

**பார்வ :** தாங்கள் எலும்பைப் பெண்ணுக்கிய புதுமை போல, பனையோடு சம்பந்தப்பட்ட மற்றப்புதுமை களை மறக்கலாமா ? ஔவைப் பிராட்டி தன் பாட் டால் பனந்துண்டம் தளிர்த்துப் பழந்தரச் செய் யவில்லையா ? சுவாமி ! வோத்தூரில் தங் கள் அடியார் ஒருவர் வைத்த பனைகள் எல் லாம் ஆண்பனைகளாக, ஞானசம்பந்தர் அவற்றைப் பெண்பனைகளாக்கவில்லையா ?

**சிவன் :** ஆண் பனை, பெண் பனை ! ஆகா ! பாரும் பிரம்மதேவ, தேவரிலும், ஆறறிவுடைய மனிதரினும், ஓரறிவுக்கு அதிகமுள்ள உயிர் களினும் மாத்திரம் தான் ஆண், பெண் என்ற பாற்பிரிவு. ஒரே அறிவு மட்டுமுள்ள தாவரங் களில் பனைக்கு மட்டும்தானே ஆண் பனை, பெண் பனை என்ற தனிச்சிறப்பு ? இன்னும், பனை பற்றிய தமிழ்ப் பழமொழிகள் எத்தனை, விடுகதைகள் எத்தனை !

**பார்வ :** பனையைத் தமிழர்கள் போற்றியிருப்பது போகட்டும் சுவாமி. தாலவிருட்சத்தின் பெரு மையை விளக்கி, (Ferguson) பெர்குஸன் என்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் ஆங்கிலத்தில் பெருநூல் இயற்றியிருக்கிறரே. "பனையின் ஆயிரத்தொரு பயன்கள்" என்று மற்றெரு ஆங்கில நூல் உள்ளதே.

**பிரம் : :** ஆமாம். பனையின் பயன்கள் ஒன்ரு, இரண்டா? ஆயிரத்தொரு பயன்கள். உண்ண உணவாய், பருகப் பானமாய், இருக்க வீடாய், படுக்கப் பாயாய், பிணிக்கு மருந்தாய், மனைக்குத் தட்டு முட்டாய், எழுத ஓலையாய், மனித வாழ்வின் அத்தியாவசிய தேவைகள் அத்தனைக்குமல்லவா பனைபயன்படுகிறது.

**சிவன் :** போதும், போதும். பனையின் பழைய பெருமைகளல்லவா இவையெல்லாம். இன்று அதன் நிலை என்னவோ?

**விஷ் ;** (உள்ளே வந்த வண்ணம்) அதைப் பற்றிய தகவலைத்தான் நான் கொண்டு வருகிறேனே!

**பிரம் :** வாரும் காத்தற் கடவுளே, சேதி கொண்டு வந்தீரா? சரிதான் – எங்கள் செவிகள் காத்திருக்கின்றன.

**விஷ் ;** பெருமைப் படும்படி அதிகமில்லைப் பிரானே!

**பிரம் :** என்ன அப்படிச் சொல்லி விட்டீர்?

**விஷ் :** பிரம்மதேவ, தாங்கள் பனையைப் படைப்பதற்கு முன்னிருந்த பஞ்சநிலைமையை நோக்கி தமிழ் நாடு மெதுவாகப் போய்க்கொண்டிருக்கிறதோ என்று அஞ்சுகிறேன்.

**சிவன் :** ஏதேது.

**விஷ் :** ஆமாம் ருத்திர மூர்த்தி, தமிழகத்தில் பொருள் வளம் குன்றி வருகிறது. மற்ற நாடுகள் பலவும் செல்வம் பெருக்கும் பொருளாதார திட்டங்கள் தீட்டி முன்னேற முயல்கின்றன. ஆனல், கற்பக தருவைப் பிரத்தியேகமாகப் பெற்றிருந்தும்கூட தமிழகத்தில் வளம் பெருக்கும் முயற்சி கணிசமாக இல்லை. பனையூரும், பனந்தரையூரும்கூட, தாலமரத்தில் கிடைக்கும் பயனை, ஏனே தானே என்று பெற்று வருகின்றனவே தவிர, அதை விருத்தி செய்ய அதிகம் முயலவில்லை.

**பார்வ :** பனங் காட்டூரில் எப்படியோ?

**விஷ் :** தேவி, தமிழ் நாட்டில் ஒரு பகுதியில் மட்டும், பயனை முற்ருகப் பயன்படுத்துவதில் இப்பொழுது தான் ஓரளவு ஊக்கம் காட்ட ஆரம்பித்திருக்கிருர்கள்.

**பிரம் ;** எந்தப் பகுதியில்?

**விஷ் :** தமிழ் நாட்டிலிருந்து, கடல் வெட்டிப் பிளந்து விட்ட யாழ்ப்பாணத்தில்.

**பிரம் :** ஹூம். அவ்வளவிலாவது சந்தோஷப் படலாம்!

**விஷ் :** பொறுங்கள் பிரம்மதேவ, அங்கும் பூரண முயற்சிஇல்லையே. யாழ்ப்பாணத்தை, பனைகெழு நாடு என்று பெருமையோடு தான் சொல்லிக் கொள்கிருர்கள். ஆனலும், ஈழத்துத் தமிழ்மக்களும், அரசாங்க உத்தியோகங்களிலும், நாற்காலி உத்தியோகங்களிலும் அதிகம் மோகம் காட்டுகிருர்களே தவிர, தேக உழைப்பில் அக்கறை காட்டக் காணேம்.

**சிவன் :** அவர்களையும் குறை சொல்ல முடியாது. நில வளமும் நீர் வளமும் குன்றிய செம்புலமல்லவா யாழ்ப்பாணம்? என்ன செய்வார்கள் அவர்கள்? . . . .

**விஷ் :** நீரோ, நில வளமோ கேளாத பனை விருட்சம் தான் அங்கு படியளக்கக் காத்திருக்கிறதே பிரபு. பனையைக் கொண்டு எத்தனையோ நவீன உணவுப் பொருட்களையும் தொழில் துறைப் பொருட்களையும் செய்து அவர்கள் வர்த்தகத் துறையில் பிரமிக்கும்படி முன்னேறி, பொருளாதார வளம்பெறலாமே!

**பார்வ :** ஆமாம் சுவாமி, இந்தக் கலியுகத்தின் போக்குக்குத் தக்கபடி அவர்கள் நடந்து கொள்ள வேண்டாமா? ஆலைகளும் தொழிற்சாலைகளும் பெருகி, வர்த்தகமும் வியாபாரமுமே பொருள் வளத்தை வளர்க்கும் மார்க்கங்களாக இருக்கும் யுகமல்லவா இது.

**விஷ் :** என்ன இருந்தாலும், இந்தத் துறையில், யாழ்ப்பாணத்தில் கொஞ்சம் விழிப்பு ஏற்பட்டுத் தான் இருக்கிறது. சமீப காலமாக அங்கு பனை மரத்தை அதிகம் பயன்படுத்தும் முயற்சி மேலோங்கி வருகிறது. பனைக்கு விழாவெடுக்கும் "பனை மகோற்சவம்." கூட அங்கு கொண்டாட ஆரம்பித்திருக்கிருர்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொலிகண்டி என்ற இடத்தில் பதநீரிலிருந்து சீனி தயாரிக்கும் சிறிய தொழில் நிலையமொன்றும், ஆரம்பித்திருக்கிருர்கள். தவிரவும், மேலைத் தேசங்களிலிருந்து வந்து குவியும் தகர உணவுகள், போத்தல் உணவுகள், மா உணவுகள் போல எவ்வளவோ, பனம் பொருட்கள் கொண்டு தயாரிக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகிருர்கள்.

**சிவன் :** விஷ்ணு பரமாத்ம, ஒன்று சொல்வேன் கேளும். விருத்திக்கு விதைப்பு ஆரம்பித்து விட்டது யாழ்ப்பாணத்தில். இறைப்பும் வளர்ப்பும் காத்தற் கடவுளாகிய உமது பொறுப்பு. இன்றே போம். உமது பிரச்சார திறமையெல்லாம் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்தில் பனம் பொருள் விருத்திக்காகப் பாடுபடுபவர்களுக்கு உதவி புரியும். பனையைக் கொண்டே அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் வளத்தைப் பெருக்கும். யாழ்ப்பாண மக்களையெல்லாம் பீடித்திருக்கும் நாற்காலி உத்தியோக மோகத்தை ஒழித்து, அவர்கள் பனையொடு பிணைந்த தொழில்துறைகளில் ஈடுபட்டு, பொருளாதார வளத்தைப் பெருக்கச் செய்யும்.

**விஷ் :** அப்படியே நுதற் கண்ணு.

(திரை)

**" நாளை நடக்கப்போகிறது "**

இடம் : தேவலோகம்
காலம் : 2000 ம் ஆண்டு–
பாத்திரங்கள் : சிவன், பார்வதி, பிரம்மா, விஷ்ணு.

(சிவன், பார்வதி, பிரம்மா மூவரும் இருக்க விஷ்ணு கையில் ஒரு பொட்டலத்துடன் நுழைகிறார்)

**விஷ் :** (களிப்புடன்) களிப்புக்குரிய செய்தி அண்டர் பீரானே, களிப்புக்குரிய செய்தி.

**சிவன் :** ஏது திருமாலே ? சந்தோஷம் தாங்கவில்லை

**விஷ் :** சுமார் 50 வருடங்களின் முன் இருந்த யாழ்ப்பாணத்துக்கும் இன்றிருக்கும் யாழ்ப் பாணத்துக்கும் எவ்வளவு வித்தியாசம், எவ் வளவு வித்தியாசம் !

**பார்வ :** சொன்னாலல்லவா உங்கள் மகிழ்ச்சியில் நாங்களும் கலந்துகொள்ளலாம் !

**விஷ் :** தேவி, சுமார் 50 ஆண்டுகளின் முன் ஈழத்தின் பனை விருட்சப் பிரசாரத்துக்கு யான் போயிருந்தது ஞாபகமிருக்கிறதா ?

**பார்வ :** ஆமாம்.

**விஷ் :** அதன் பலனைச் சொல்கிறேன் தேவி. நெற்றிக் கண்ணு, அன்று பொருள் வளத்தில் அமெரிக்கா தேசம் முன் நின்றது. இன்று அந்த ஸ்தானம் ஈழத் தமிழகத்துக்கு. அன்று தொழில் வளத்தில் ஜப்பான் முதல் ஸ்தானம் பெற்றிருந்தது. இன்று அந்த இடம் யாழ்ப்பாணத்துக்கு.

**பார்வ :** இது எப்படி நடந்தது பரமாத்ம ?

**விஷ் :** உலகமெங்கும் இன்று ஈழத் தமிழகத்தி லிருந்து ஏற்றுமதியாகும் பனை உணவுப் பொருட்களும் இதர பனம் பண்டங்களுமே அதிகம் செலவாகின்றன. பனைசெழு நாடாகிய யாழ்ப்பாணம் சீனி உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. ஈழம், இப்பொழுது பனம் பழக் களியும், பனாட்டும், நுங்குச்சாறும், பனங்கிழங் கும், ஒடியல் மாவும், பதனீர்ப்பானங்களும், பனந்தளவாடங்களும், தட்டு முட்டுக் கைப்பணிப் பொருட்களும், இன்னும் அநேக சாமான்களும் ஏற்றுமதி செய்து வருகிறது.

உலகில் பல நாடுகளும் நகரங்களிலும், போத்தல்களிலும், மூடைகளிலும், வேறு சாதனங்களிலும் அனுப்பப்படும் பனம் பொருட்களைப் போட்டிபோட்டு வாங்குகின்றன. பனை உணவுப் பண்டங்களுக்கு கிராக்கி இல்லாத நாடே உலகில் இல்லை. பனம் பண்ட உற்பத்தித் தொழிற்சாலைகளால் ஈழத் தமிழகம் நிரம்பிவிட்டது. பொலிகண்டியில் பிரமாண்ட சீனித் தொழிற்சாலை, ஆனை யிறவில் பென்னம் பெரிய பனைமரக்காலை, யாழ்ப்பாணப் பட்டணத்தில் விஸ்தாரமான பனம்பண்ட உற்பத்தி நிலையம், இன்னும் எத்தனை எத்தனையோ !

**பார்வ :** வணிகமும் தொழில்துறையும் வளர்ந்து விட்டால், பனை செழு நாட்டில் வளம் பொங்கு வதற்குக் கேட்கவா வேண்டும் ?

**சிவன் :** மகிழ்ந்தோம் பரமாத்ம, மகிழ்ந்தோம். ஆமாம், இது என்ன கையில் பொட்டலம் ?

**விஷ் :** மாதிரிக்காக ஈழத்தில் தயாராகும் சில பனம் பண்டங்கள் கொண்டுவந்தேன் பிரபு ! (பார்வதியிடம் பொட்டலத்திலிருந்து ஒரு போத்தல் எடுத்துக் கொடுத்து) தேவி ! இதோ நுங்குச் சாறு. (சிவபிரானிடம் மற்றொரு போத்தலைக்கொடுத்து) இந்தாருங்கள் பிரானே பதநீர்ப்பானம். (பிரம்மாவிடம் ஒரு தகரத்தைக் கொடுத்து) பிரம்மதேவ ! பொலிகண்டிச் சீனி இது.

**பிரம்:** (சீனியை வாயில் போட்டு) ஆகா ! இதைப் போன்ற இனிய பொருளை நான் சுவைத்ததே இல்லை.

**பார்வ :** (பருகிய பின்) தேவாமிர்தத்திற்கும் இந்த ருசி இல்லை.

**சிவன் :** (பருகியபின்) சோமபானம் தோற்றது ! திருமாலே. ஈழத்திலிருந்தே இனி எங் களுக்கு வேண்டிய சகல பான வகைகளையும் தருவிக்க உடனே ஏற்பாடு செய்யும் !

**விஷ் :** பிரபு, இத்தகைய சிறப்புப் பெற்ற ஈழத் தமிழகம் மேலும் வளம்பெற நாம் வாழ்த்த வேண்டாமா ?

**எல்லோரும் :** (ஆசிகூறும் பாவனையில் கை தூக்கிய படி பாடுகிறார்கள்)

(30 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமும் தேசீய வைத்தியமும்

எழுதியவர் : R. S. S. நாதன்., இலங்கை அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி, கொழும்பு

உலகில் தோன்றியும் மறைந்தும் சுகதுக்கங் காணும் சீவ வர்க்கங்களில் உயர்திணையில் வைத்துக் கருதப் படுவது மனித வர்க்கமேயாகும். அந்த உயர்திணை வர்க்க மனிதனுக்கே அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் பெறுவதே வாழ்க்கையின் நோக்கம் என்று சிந்திக்கும் சக்தி உதயமாகின்றது. இதனால் உயிர்க்குறுதுணையான நாற்பயன்களையும் பெறுவதற்கு நீண்ட நல்வாழ்க்கை மனிதனுக்கு முக்கியமாகப்படுகின்றது. நல்வாழ்க்கையை அமைப் பதற்கு மனிதனிடம் நல்ல ஆரோக்கியம் வேண்டும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று கருதும் மனிதன் "சுவரை வைத்துக் கொண்டு சித்திரம் வரைய வேண்டும்" எனச் சிந்தித்து முதலில் உடலை உரமாக்கி அதனால் உள்ளத்தைப் பண்படுத்தி உயிர்க்குறுதுணையான நாற்பொருள்களை யும் அடைய முற்படுகின்றான். அதனால் ஆரோக்கிய வாழ்வைக் கொடுக்கும் அரிய மருந்துகளைத் தளராத ஆத்மீக சக்தியைக் கொண்டு ஆராயத் தொடங்கினான். அத்தகைய ஆராய்ச்சிகளால் ஏற் பட்டவைதான் மருந்தும், மருத்துவ நூல்களும், மருத்துவரும், மருத்துவத் தொழிலுமாகும்.

உடல் வலிமையை நிலைபெறச் செய்வதும், நோய் வராமற் காப்பதும், வந்த நோய்களைப் போக்கு வதும், மருந்துகளின் இயல்பான செயல்களாகும். நோய்களினியல்புகளையும், அவற்றைத் தடுத்தல், போக்கல் ஆகிய செய்யும் மருந்துகளின் தன்மை களையும் விளக்கிக் கூறும் குறிப்புகளடங்கியவை மருத்துவ நூல்களாகும். அத்தகைய நூல்களை ஆராய்ந்து கற்றவனை "மருத்துவன்" என்றும் அவன் செய்யும் தொழிலை "மருத்துவம்" என்றும் அழைக்கின்றோம்.

மருத்துவம் முதன் முதலில் ஆராயப்பட்டது தமிழ மக்களாலே தான் என்பதற்கும், மருத்துவம் பிறந்தது தமிழ நாட்டிலே தான் என்பதற்கும் பல பொறுப்பான ஆதாரங்கள், முதற்சங்க கால மாகிய கி.மு. 10,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே காணப்படுகின்றன. இவ்வுலகில் பழமை தொட்டு நாகரிகத்தின் உன்னத நிலையை அடைந்தவர்கள் எகிப்தியரும் சுமேரியருமே என்பது உலக சரித்திர ஆராய்ச்சியாளரின் முடிவாயினும், 1921 ம் ஆண்டு வரையில் அரபா, மோகஞ்சதரோ, சங்குதரோ முதலான இடங்களில் புதை பொருளாராய்ச்சியின் போது வெளியாகிய பசுபதி தோற்றத்தையும், யோக நிலை முத்திரையையுங் கொண்டு சேர். மார்ஷல் என்பவர் அங்கு வாழ்ந்த மக்களின் நாகரிகம் திராவிட நாகரிகமே என்று கூறியுள்ளார். இக் கொள்கையை ஆராய்ச்சியாளர்களான ஆர். டி. பானர்ஜி, ஆர். கே. முக்கர்ஜி போன்றவர்களும் ஆதரித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டு முதன் முதலாகச் சீர்திருத்தமடைந்த மக்கள் குமரி கண்டத் திலே வாழ்ந்தார்கள் என்றுங் கூறத் தொடங்கினர். ஒரு காலத்தில் ஈழநாட்டுடன் சேர்ந்து பரந்த நிலப் பரப்பாக விளங்கிய இந்தியாவிலேதான் முதன் முத லாகச் சீர்திருத்தமும் கலையுணர்வுமுடைய மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்பதை ஆராய்ச்சியாளர் ஒப்புக் கொள்ளுகின்றனர். "நாகரிகம்" என்ற சொல் பண்டை நாகர்தம் சீர்வழி வந்ததெனவும், அவர்களது வழிபாட்டுச் சின்னங்களாகிய "சிவ லிங்கம்" போன்றவை அரேபியா, ஐரோப்பா, முதலான இடங்களில் இன்றும் காணப்படுகின்றன வென்றும், அவ்விடத்து மக்களும் "நாகர்" இனத் தவரே யென்றும், இவர்களது ஆதி மருத்துவமே எகிப்து, பாபிலோனியா, அரேபியா, சைப்பிரஸ், மால்டா, பிரித்தானியா முதலான தேச மக்களும் கற்றுச் சாதனை செய்தனர் என்றும் இன்று சரித்திர வல்லுனர் முடிவு தருகின்றனர். இதனால் நாகர் வாழ்ந்து வந்த ஈழமும், மருத்துவக் கலையிலும் நாகரிகத்திலும் தொன்மை வாய்ந்தது என்பது தெளிவாவதுடன் இன்று பிரித்துக் கூறப்படும் மேற் கத்திய வைத்தியமும் நமது தேசீய வைத்தியமும் ஒன்றே என்றும், நமது தேசீய வைத்தியத்தி லிருந்தே மேற்கத்திய வைத்தியம் பிறந்தது என்றும் கொள்வது பொருந்தும்.

ஆதி மருத்துவக்கலையும், அவற்றை விளக்கும் மருத்துவ நூல்களும் சித்தர்களால் உருவாக்கப் பட்டனவாகும். தன்வந்திரி, அசுவினி தேவர், அகத்தியர், புலத்தியர், தேரையர், முதலான சித் தர்களால் ஞானசக்தியால் உணரப்பட்டு, பதினெண் சித்தர்கட்கும் உணர்த்தப்பட்டு, அவர்கள் வழித் தோன்றிய பற்பல சித்தர்களால் தமிழில் இம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் மறுமையிலும் இன்பம் தரும் பல நூல்கள் இயற்றப்பட்டன. அவற்றில் வைத்தியம், மனு (மந்திரம்), வாதம் (ரசவாதம்), கற்பம், யோகம், ஞானம் என்ற ஆறு பொருள்களையும் விளக்கிக் கூறியிருக்கின்றனர்.

வைத்தியம், மனு, வாதம், கற்பம், யோகம், ஞானம் ஆகிய ஆறு பொருள்களையும் விளக்குவதையே "சித்தர் ஆயுள்வேதம்" என்பர். வடமொழி ஆயுள்வேதம் சித்தர் வைத்தியத்திலிருந்தே பிறந்தது என்று பல ஆராய்ச்சியாளர் உறுதி கூறுகின்றனர். ஆனால் இக்கூற்றை ஒரு சிலர் ஒப்புக் கொள்வதில்லை. சென்னை ஆயுர்வேத நிபுணரான டாக்டர் ஏ. இலட்சுமிபதி விஜய நகரில் நடந்த ஆயுர்வேத மகாநாட்டில் வட நூலாரால் தழுவப் பட்ட "எண்வகைப் பரீச்சை" "தமிழர்களுக்கே தனிமையான உரிமையுடையது. யோக சாத்திரமும், சூரியன், சந்திரன் என்னும் கலைஞானமும் அவர்களதே" என்று கூறியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இவற்றையெல்லாம் ஒருங்கமைத்து நோக்குமிடத்து நமது தேசீய வைத்தியமே மிக மிகத் தொன்மை வாய்ந்தது என்பது புலனாகும்.

இத்தகைய சிறப்புகளடங்கிய நமது தேசீய வைத்திய முறைகளை நீக்கி மேற்கத்திய மருந்துகளில் இதுநாள்வரையும் நாகரிகத்தின் மோகத்தில் மயங்கி வந்தோம். மேற்கத்திய வைத்திய முறைகளால் குணங்காணமுடியாத எத்தனையோ கொடிய வியாதிகளை நமது தேசீய வைத்திய முறையிலே குணங்காணலாம் என்பதை யாருமே மறுத்துக் கூறமுடியாது.

ஈழத்தின் தேசீய வைத்தியம் நிலைமாறியதற்குப் பொறுப்பாளர்கள் நமது நாட்டு வைத்தியர்களில் ஒரு சிலரேயாகும். பண்டைய காலத்தில் "அரசன் இன்றேல் மருத்துவன் ஆகுக" என்னும் பழமொழிக்கிணங்க "மருத்துவன்" அரசனாலும் மக்களாலும் போற்றப்பட்டு வந்தான். ஆனால் தற்காலத்தில் "எய ஒன்றுமில்லையேல் வைத்தியன் ஆகுக" என்பதற் கொப்ப சில நாட்டு வைத்தியர்கள் தேசீய மருத்துவ நூல்களில் ஒரு சிலவற்றிலுள்ள பாடல்களைப் படித்ததும் ஒரு மருந்துப் பெட்டி சகிதம் வீடு வீடாக நோயாளரைத் தேடித் திரிவதால் உண்மையான திறமையுடைய வைத்தியமே பைத்தியகாரர் கையில் சிக்கிப் பாழடைகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பரிபாஷைகளில் எழுதப்பட்டுள்ள மருத்துவ நூல்களில் ஒரு சொல் பல பொருள்கள் குறிப்பதால் அவற்றைக் கற்பவர் தக்க வைத்திய நுணுக்கப் பேராசிரியர்களிடம் கற்றுத் தேர்ந்து, நிபுணர்களான வைத்தியரிடம் அநுபவம் பெற்று ஆராய்ந்த வைத்திய அறிவுடன் வைத்தியத் தொழிலில் ஈடுபடவேண்டும் என்பதை நம்முன்னர் காட்சியளிக்கும் போலி வைத்தியர் கூட்டம் சிந்தனை செய்யத் தவறியதன் காரணமாக வளர்ந்துவரும் கலைகளுள் மனித வாழ்வை வளமாக்க வேண்டிய மருத்துவக்கலை படுகொலை செய்யப்பட்டு வந்தது. அத்தகைய போலி வைத்தியர்கள் சிலர் தேசீய வைத்தியர்களின் வைத்தியப் பதிவுச் சட்டம் (Registration of Indigenous Medical Practitioners) வந்ததும் மருத்துவத்தில் சிறிதளவும் அறிவோ, ஆற்றலோ, அநுபவமோ இல்லாதிருந்தும் வைத்தியர்கள் என்று பறைசாற்றுவதைத் தடை செய்ததாயினும் எதிர்பார்த்தளவு பயனளித்ததில்லை.

இன்று தேசீய வைத்திய வளர்ச்சி குறித்து நமது அரசாங்கம் பலவித ஆக்க வேலைகளைச் செய்கின்றது என்பது போற்றக் கூடிய செய்தியாகும். பிறநாட்டு மருந்துகளின் உதவியில்லாது தேசீயப் பொருட்களால் மருந்துகளை முறைப்படி செய்யும் வைத்திய சாலைகளையும் "சுதேச வைத்தியக் கல்லூரி"யையும் திறம்பட நடாத்தி வருவதுடன் பயனளிக்கும் இன்னும் பல திட்டங்களையும் ஆராய்ந்து வரும் அரசாங்கத்தையும் பெண்கள் திலகமென விளங்கும் நமது சுகாதார மந்திரி அவர்களையும் நாம் நன்றியுடன் போற்ற வேண்டியவர்களே என்பதில் ஐயமில்லை.

கொழும்பு அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரியில் தேசீய வைத்தியக் கலையை மூன்று பிரிவுகளாகப் பிரித்து சித்த வைத்தியம், ஆயுள்வேதம், யுனானி என்றபடி மாணவர்களுக்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வைத்தியக் கல்வியளிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி மாணவர்கள் ஐந்து வருடங்கள் வரையில் தக்க வைத்தியப் பேராசிரியர்களால் பயிற்றப்பட்டு வெளியேறிய பின்னரே வைத்தியத் தொழிலில் ஈடுபடுவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுதேச வைத்தியக் கல்லூரியில் சித்த, ஆயுள்வேத, யுனானி வைத்தியங்களை முக்கியமாகப் போதிக்கப்படுகின்றனவாயினும் அக்கலையை தற்பொழுது விருத்தியடைந்துள்ள விஞ்ஞான ரீதியில் கற்பிக்கப்பட்டால் அக்கலையானது மேன் மேலும் விருத்தியடைவதற்கும், ஒவ்வொரு பதார்த்தத்திலுமுள்ள பண்புப் பொருட்களைக் கண்டு கொள்வதற்கும், அவற்றை மூலாதாரமாக வைத்துக் கொண்டு பண்டைய நூல்களில் காணப்படும் கூட்டு மருந்துகளை (Compound Medicine) ஆராய்ந்து அறிந்து

(24 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தில் பிரசித்திபெற்று விளங்கும் புராதன இந்துச் சிவாலயம்

## தான்தோன்றி ஈஸ்பரன்பற்றிய கர்ணபரம்பரை ஐதீகங்கள்

[திரு. செ. கணபதிப்பிள்ளை அவர்கள், மட்டக்களப்பு]

இலங்கையின் கரையோர மாகாணங்கள் போத்துக்கேயரின் ஆதிக்கத்துள் இருந்த காலத்தில், அவர்கள், தம்மதத்தைப் பரப்புவதிலும் மேனாட்டுக் கல்வி முறையைப் பரப்புவதிலும் பெரிதும் கண்ணோட்டஞ் செலுத்தினர். முக்கியமாக பௌத்த விகாரைகளும் இந்து ஆலயங்களும் இவர்களுக்குப் பெருந் தடையாகவிருந்தமையால், இவற்றை அழித்து ஒழிப்பதில் ஈடுபட்டனர். ஆலயங்கள் கட்டப்பட்டிருந்த கற்களைக்கொண்டு கோட்டை கொத்தளங்களையும், கத்தோலிக்க கோயில்களையும் நிர்மாணித்தார்கள். திருக்கோணமலையிலுள்ள கோணேசர் ஆலயமும், டொன்ருவிலுள்ள விஷ்ணு ஆலயமும், சிலாபத்துக்கருகிலுள்ள முன்னீஸ்வரன் கோயிலும் இவர்கள் கையில் சிக்கி அழிவுற்றன. அக்காலத்தில் கிழக்கு மாகாணத்திலே பிரசித்திபெற்ற "தான்தோன்றி ஈஸ்வரன்" கோயிலும் இதே கதியைத்தான் அடைந்திருக்கும்! ஆனால், அதிர்ஷ்டவசமாக இக்கோயிலைப் போர்த்துக்கேயத் தளபதி பிடிக்கமுயன்றபோது, ஆங்கு அமைந்திருந்த நந்தி, அத்தகைய ஆபத்தினின்றும் காப்பாற்றியதுமட்டுமன்றி இந்துமதத்தின் பெருமையை அந்நிய மதத்தார் அறியவைத்த பெருமையையும் பெற்றுவிட்டது!

கிழக்கிலங்கையிலே பழமையும் பெருமையும் வாய்ந்த இந்துக்களின் சிவாலயங்களுள், இவ்வாலயமும் ஒன்ருகும். மட்டக்களப்புப் பட்டினத்திலிருந்து சுமார் 7 மைல் தூரத்தில், வாவியின் மேற்குப் புறத்தில், கொக்கொட்டிச்சோலை என்னும் பழம்பதியொன்றுண்டு. மருத நிலத்தைச்சார்ந்த இப்பழம் பதியிலேதான், இச்சிவாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தைப்பற்றிய பூர்வீக வரலாறுகள், வரலாற்றுநூல் வல்லோருக்கு நல்

தான்தோன்றி ஈஸ்வரன் கோயிலை இடியாமல், போத்துக்கேயத் தளபதியினின்றும் காப்பாற்றிய நந்தியை இப்படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தாயமைவதுடன், ஆங்கு எழுந்தருளியுள்ள பெருமான்மீது அளவில்லா பக்தியையும் ஏற்படுத்தி விடுகிறது!

மகாநாமன் காலத்தில் (கி. பி. 412-468), இலங்கையின் கிழக்குப் பாகத்தின்மீது "குளக்கோட்டன்" என்னும் சோழ அரசன் படையெடுத்து தன்னாதிக்கத்தை நிலைநாட்டினனாயினும், பின்பு பல நூற்றாண்டுகளாக சிங்கள அரசர்களுக்குக் கப்பஞ்செலுத்தும் தமிழ் இராச்சியமாகவே கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதி இருந்துவந்தது எனத் தெரியவருகிறது. இதனைக் காலஞ்சென்ற முதலியாரான திரு. எஸ். ஓ. கனகரெத்தினம் அவர்கள், "Monograph of the Batticaloa District" என்னும் நூலில் வலியுறுத்துதல் நோக்கற்பாலதாகும்! இக்காலத்திலே திருக்கோணமலையில் குளக்கோட்டன் கோயிலமைத்தானென்றும், இவன் காலத்திலேயே தான்தோன்றி ஈஸ்வரன் இலிங்கம் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கலாமென்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். இவர்தம் கோட்பாட்டுடன், "பஞ்சபதிக்கல்வெட்டு" இணக்கமுற்றிருப்பதாக அவர்கள் வாதிப்பர். ஒருசாரார், இவ்வாலயத்திலுள்ள இலிங்கம் தானே தோன்றியது என்று கூறுகின்றனர்.

மருதநிலத்தைச் சார்ந்த இப்பழம்பதி, கொக்கொட்டிமரங்கள் நிறைந்த அடர்த்தியான வனமாக இருந்தது. முன்பொருபோது வேடனொருவன் வேட்டையாடிச் செல்கையில், கொக்கொட்டி மரமொன்றின் பொந்தில் தேன்கூடு இருப்பதைக் கண்ணுற்று அம்மரத்தில் தேனெடுக்கமுயன்ற போது அம்மரத்தடியில் சிவலிங்கமிருப்பதைக் கண்டு விரைந்து சென்று கிராதன் வேந்தனுக்கறிவித்தானென்றும், அதன்பின்பு வேடர்கள் பந்தரிட்டு வழிபடலாயினரென்றும், அந்த இலிங்கமே தற்போது ஆலயத்தில் காணப்படும் இலிங்கமென்றும் கூறுவதை இங்குள்ள சாதாரண மக்களின் வாயினின்றும் இப்பொழுதும் கேட்கலாம்.

இங்ஙனம் கான வேடுவர்களின் ஆதிக்கத்துள் இருந்த ஸ்தலத்தைக் காலவரையில் முற்குகர் எனப்படுவோர் கைப்பற்றி அப்பகுதியில் குடியேறினார்கள். அதன் பின்பே மற்றைய குலத்தினரும் ஆலயத் திருப்பணிகளில் பங்கெடுத்துக்கொண்டனர். பல வருடங்களுக்குப் பின்புதான் ஆலயக் கட்டிட நிர்மாணம் ஏற்பட்டதென அறியப்படுகிறது.

இவற்றைவிட மக்களிடையே ஆலயத்தைப்பற்றிய மற்றுமொரு கதை நிலவிவருகிறது. நாம் ஏலவே குறிப்பிட்ட பிரகாரம், போர்த்துக்கேயர்கள் பௌத்த விகாரைகளையும், இந்துக் கோயில்களையும் அழிப்பதில் நாட்டஞ்செலுத்திய காலத்தில், அப்போது பிரசித்திபெற்று விளங்கிய இவ்வாலயத்தையும் அழிக்க முயன்றனர். இதனையொட்டி, போர்த்துக்கேய தளபதியொருவன் குதிரையில் சவாரி செய்து இக்கோயிலை அடைந்தான். இந்துமத ஆசாரங்களையறியாத இத்தளபதி நேரே கோயிலுக்குள் நுழைய முயன்றபோது, ஆலயக் குருக்கள் அவனைத் தடுத்து வெளியே நிற்குமாறு வேண்டினர். அகங்காரத்தினால் உந்தப்பட்ட அதிகாரி அலட்சியஞ்செய்து ஆலயத்துள் புகுந்தபோது, கல்லினாலாய நந்தியொன்றிருப்பதைக் கண்டான். நடமாடும் நந்தி நகரமுடியாதிருப்பதென்னே என்று பரிகாசம் செய்து, "இதனை யுமா வழிபடுகிறீர்கள்; இந்த நந்தி புல்லுத் தின்னுமா?" என்று அர்ச்சகரிடம் வினவினான். ஆத்திரங்கொண்ட அர்ச்சகர், "ஆம்" புல்லுத் தின்னும்; வெள்ளிக்கிழமை வாரும்; விந்தையைப் பாரும்!" என்று பதிலிறுத்தார். குறித்த நாள் நெருங்குவதையிட்டுக் கலக்கமடைந்த அர்ச்சகர், தினமும் தன் வாக்கை நிறைவேற்றிவைக்குமாறு பெம்மானை வழிபடுவாராயினர். அருளுருவாகி அன்பர்தம் துயர்தீர்க்கும் எம்பிரான் "அஞ்சற்க; யாம் உம் துயர்நீக்குவோம்; அறுகம்புல்லை பாலில் கழுவி நந்திமுன் இடுக" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

வெள்ளிக்கிழமை வந்தது. வேந்தர் தம் தளபதியும் விரைந்து வந்துசேர்ந்தனன். அர்ச்சகரும் அறுகம்புல்லைப் பாலில் கழுவி நந்திமுன் இட்டார். கல்லினாலாய நந்தி எழுந்து, புல்லையுண்டு சாணமிட்டு மீண்டும் முன்போலக் கல்லாகமாறியது. அதேபோன்று, சாணக் குவியல்களும் கல்லாக மாறின. இவ்விந்தையைக் கண்டு விழித்த தளபதி வெட்கி, அக்கோயிலை இடியாது சென்றான். அவன் குதிரை மேலேறித் திரும்பிச் செல்கையில் ஆலயத்தின் புறமதிலைக் கடக்கும்போது, குதிரையின் குளம்பு பட்டமையால், அம்மதிலில் வெடிப்பேற்பட்டது. இங்ஙனம் குளம்புபட்ட இடம் தற்போது உடைந்து சிதைந்து காணப்படுகின்றது. இதனைத் திருத்தியமைக்கப் பலதடவை முயன்றபோதும், மீண்டும் முன்போல இடிந்துவிழுந்ததாம் என்று அவ்வூர்வாசிகள் கூறுகிறார்கள். இதேபோன்று கோயிலின் உள் வீதியில் குதிரையின் குளம்புபட்ட இணைரென்றும் கட்டக் கட்ட இடிகிறதாம். ஈஸ்வரன் பெருமைதான் என்னே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தைத் தரிசிக்கும் எவரும் நந்தி மண்டபத்தின் சுவரில் இரு பெரிய துவாரங்களைக் காணலாம். இவற்றைப்பற்றிய வரலாறு, இலிங்க வடிவாகிய மூர்த்தியின் பெருமையை விளக்குவதாக அமைகிறது. நாம் முன்பு மேலே குறிப்பிட்ட கோயில் அர்ச்சகர், ஆலயத்துக்கணித்தாயுள்ள, உப்பாற்றுக்கு மறுபுறத்தே வாழ்ந்துவந்தார். இவர் தினந்தோறும் தோணிமூலம் ஆற்றைக்கடந்து, வந்து பூசைக்கிரியைகள் செய்தபின்பு, வீட்டுக்குத் திரும்பிச்செல்வர். ஒருநாள் இவர் ஆலயத்துக்குச் சென்றபின், இவருடைய மகன் தாய்க்குத் தெரியாமல் தோணிமூலம் ஆற்றைக் கடந்து, நந்தி மண்டபத்தின் ஒரு மூலைக்குள் பதுங்கியிருந்தான். தன் மகன் ஆலயத்துக்குள் இருக்கிறான் என்பதை யறியாத அர்ச்சகர், வழக்கம்போல் பூசைமுடிந்த பின்பு, கதவைப் பூட்டி வீடு சேர்ந்தார். தாய் மகனைக் காணாது வருந்திய நிலையிலிருப்பதை அறிந்த அவர், மகன் ஆலயத்துக்குச் சென்றிருக்கலாமெனக் கருதி மீண்டும் ஆலயத்துக்கு வந்தார். ஆனால், ஆலயத்தின் கதவைப் பூட்டினால் மறுநாள் காலையிற்றான் திறப்பது வழக்கமும் நியதியுமாகவிருந்தது. ஆலயத்தின் உள்மதிலைச் சுற்றி அங்குமிங்கும் தேடுகையில், யாரோ ஆலயத்துக்குள் கதைப்பதைச் செவிமடுத்தார். தன் மகனின் குரலென ஊகித்தறிந்த அவர் இங்ஙனம் மகனோடு உரையாடுவது எம்பிரானேயெனக் கருதி மகனைத் தருமாறு இரந்தார். நாளைக் காலைத் தருவதாகக் கூறியும், அர்ச்சகர் பிடிவாதமாக நின்றமையால் இச்சிறுவனை இரண்டாகக் கிழித்து எம்பிரான் எறிந்தார். சுவரின் ஊடாகவந்த அவ்விரு பாதிகளையும் அர்ச்சகர் இணைத்தபோது சிறுவன் உயிர்பெற்றெழுந்தானாம். கிழித்தெறியப்பட்டமையினால் ஏற்பட்ட துவாரங்கள் இன்னும் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும் !

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றனுள்ளும், இப்புராதனச் சிவாலயம் முன்னைய இரண்டினுமே சிறப்புற்று விளங்குகிறது. இலங்கையிலுள்ள இலிங்க வழிபாட்டைப் பற்றி கூறுகையில், " Hinduism in Ceylon " என்னும் நூலில் அதன் ஆசிரியரான் வண. ஜேம்ஸ் காட்மண், இவ்வாலயத்திலுள்ள இலிங்கம் பிரசித்திவாய்ந்ததெனக் குறிப்பிடுகின்றார்.


இத்தகைய பெருமைவாய்ந்த ஆலயத்திலே தினமும் முக்காலப்பூசை நடைபெறுகிறது. வருடா வருடம் ஆவணி மாதத்தில் ஆலயத்தில் கொடியேற்றப்பட்டு, இருபத்தொரு நாட்களுக்கு திருவிழாக்கள் வெகு விமரிசையாக நடைபெறும். இருபத்தோராம் நாள், அழகிய சிற்பவேலைப்பாடுகள் அமைந்த சித்திரத் தேரிலே உமையும் சிவனும், மற்றத் தேரிலே ஐங்கரனும் எழுந்தருளப்பெற்று கோயிலை வலம் வருவர். தேரோட்டத்தைத் தரிசிப்பதற்காகப் பக்தர்களும் அடியார்களும், கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பாகங்களிலுமிருந்து பெருந் திரளாக வருவர். விழாக்காலத்தே, ஏறக்குறைய தினமும் ஆலயத்துக்கருகாமையில் நாட்டுக் கூத்துக்கள் நடைபெறும். சுமார் 222 வருடங்களுக்கு முன்பு, இந்தியச் சிற்பிகளினால் மூன்று தேர்கள் ஆக்கப்பட்டதென்றும், அவற்றுள்



◀ போத்துக்கேய தளபதி திரும்பிச் செல்கையில், குதிரையின் குளம்பு பட்டு வெடிப்பெய்திய சுவரின் பகுதி, தற்பொழுது சிதைந்து காணப்படுகிறது.

▶ தான்தோன்றி ஈஸ்வரன் கோயிலின் ஒரு தோற்றம்.





222 வருடங்களுக்கு முன்பு இந்திய சிற்பிகளைக்கொண்டு ஆக்கப்பட்ட இத்தேரை ஆயிரக்கணக்கான பக்தர்கள் இழுப்பதை இப்படத்தில் காணலாம்.

ன்று இழுபட்டுச் செல்கையில் உப்பாற்றில் ஆழ்ந்ததாகவும் அறியப்படுகிறது. இத்தேர் ஆழ்ந்த இடம் "தேர்தாண்டபள்ளம்" என இப்பொழுதும் அழைக்கப்படுகிறது. தேர்களில் வடம்பூட்டப்பட்டு பூசைக் கிரியைகள் நடைபெற்ற பின்பு, பூசினிக்காய் வெட்டுவது வழக்கம். வருடா வருடம் தேரிலே படர்ந்து கொழுந்துவிட்டுக் காய்க்கும் இப்பூசினிக்காய் பலியிடுவதனுல், தேர் இலகுவாக இழுபடுமென்ற ஐதீகமுண்டு.

தேரோட்டம் நடந்த மறுநாள் திருவேட்டையாடுதற்பொருட்டு சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள குளக்கரைக்கு, பல்லக்கிலே சுவாமி கொண்டுசெல்லப்படுவர். அங்குதான் வரன்முறை தழுவி, பல்வேறு குடிகளுக்கும் குடுக்கைகள் வழங்கப்படும். அன்றிரவு நடைபெறும் துவசாரோகணத்துடன் வருடாந்த உற்சவம் முடிவெய்தும்.

இந்துக்களாகிய நாம் இவ்வாலயத்தைத் தரிசித்து இறைவனருள் பெறுவது எம்பெருங்கடனுகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியும் பெண்களும்

விநாயகி எழுதியது (ஒலிபரப்பப் பெற்றது)

*ஊரறிய நாடறிய உண்மையெல்லாம்*
*ஒருவரையும் அஞ்சாமல் எடுத்துரைத்தோன்*
*ஆரமுதம் அனையகவி பாடித் தந்தோன்*
*அமரகவி என்றெவரும் புகழப் பெற்றோன்*
*சீருயரும் தமிழ் மக்கள் செய்த தவத்தால்*
*தென்னாடு சிறக்க வந்த சுப்ரமணியன்*
*பாரதியார் பெயர் போற்றி ஏத்துவோமே !*
*பாமாலை புனைவதற்குச் சாத்துவோமே !*

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே கவிஞன் பிறக்கின்றான் என்பது ஆங்கில அறிஞரொருவர் மணிமொழி. இம்மொழி முற்றிலும் உண்மையென்று தமிழ் நாட்டில் தோன்றிய கவிஞர்கள் மெய்ப்பித்து வருகின்றனர். கவி அரசர் கம்பர் பெருமானுக்குப் பின்னர் தமிழ்க் கவிதை உலகம் ஒரு வரண்ட பாலைநிலமாகத்தான் இருந்தது. தமிழ் அன்னையின் தண்ணருளால், அப்பாலை நிலத்தைச் செழும் பசும்புற்றரையாக்கிப் பூஞ்சோலையும் நீர்த்தடமும் ஏற்படுத்தியவர் நம் தேசீய கவிஞரான வரகவி-சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியார் பிறக்கும் பாக்கியம் பெற்றது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள எட்டையாபுரம். ஆங்கிலம், தர்க்கம், கணிதம் முதலியனவற்றில் பெரும் புலமை வாய்ந்து விளங்கிய சின்னச்சாமி ஐயருக்கும், லக்ஷ்மி அம்மாளுக்கும் புத்திரராகப் பாரதியார் பிறந்தார். இவர் பிறந்தது 1882ம் வருடம் நவம்பர் மாதம் 11ம் திகதி. 'சுப்பையர்' என்று செல்லமாக அழைக்கப்பட்ட இவர் தமது ஐந்தாவது பிராயத்திலேயே தம் தாயை இழந்தார். இவரது இளமைக் கல்வி எட்டையபுரத்தில் தந்தையின் மேற்பார்வையில் நடைபெற்றது. கல்வியிலே தமது மகன் தேர்ச்சி பெறவேண்டும் என்பது தந்தையின் விருப்பம். ஆனால், தனயனுக்குப் பள்ளிப் படிப்பினிலே மதி பற்றிடவில்லை. ஏழெட்டு வயதிலேயே மோகமான பகற்கனவுகள் காண்பதிலும் சிங்கார ரஸமுள்ள கவிகள் இயற்றுவதிலும் பிரியங் கொண்டார். தமது பதினோராவது வயதிலே கவி பாடத் தொடங்கிய பாரதி தம் மூச்சு நிற்கும் வரை வாயை மூடவில்லை. இவருடைய எளிய தமிழ்க் கவிதைகள் எல்லோருடைய மனங்களையும் கவர்ந்தன.

பாரதியார் பள்ளிப் படிப்பிலே அத்தனைபிரியமின்றி இருந்த போதிலும் இளமையிலேயே அவர் தாய் மொழியிடத்தே கொண்ட அன்பு பெருகிவளர்ந்தது. இயற்கையிடத்திலே உள்ள ஈடுபாடு அவருக்கு அதிகம். பிற்காலத்தில் அவரது இயற்கைக் காதல், கடவுள் காதல், சீவ தயை முதலியவை தேசத்தின் க்ஷேமத்தில் காதல் கொள்ளவும், பரமாத்மாவாகிய கண்ணனிடம் நீங்காத பக்தியை உண்டு பண்ணவும், தான் வேறு கடவுள் வேறு என்ற பிரிவுணர்ச்சியின்றி எல்லாரும் கடவுள் என்ற சமபாவம் அடையவும் காரணமாயின.

'இந்தியா' என்னும் வாரப் பத்திரிகை நடத்திய காலத்தில்தான் பாரதியாரின் புகழ் நாட்டில் பரவத் தொடங்கியது. கவிதையிலும், எழுத்திலும், பேச்சிலும் அவரது வல்லமையைப் பொதுமக்கள் உணர ஆரம்பித்தனர். நாட்டிலேயும் அப்போது சுதந்திர இயக்கம் முதன்முதலாக விழித்தெழுந்திருக்கும். தமிழ் நாட்டிலே அந்தச் சுதந்திரக் கனலின் ஜுவாலைக் கொழுந்தாக விளங்கினார் பாரதியார். இந்தியாவிலே தோன்றியிருந்த புதிய உணர்ச்சியின் கவிதா சொரூபம் பாரதியார். அவரது இந்தியா பத்திரிகையில் கனல் நிறைந்திருந்தது. உணர்ச்சியும், விகடமும், கேலியும், நையாண்டியும் பக்கத்துக்குப் பக்கம் சிதறிக் கிடந்தன.

*வீரசுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்*
*வேறொன்று கொள்வாரோ ?—என்றும்*
*ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்*
*அறிவைச் செலுத்துவாரோ ?*

*பிறந்தவர் யாவருமிறப்ப துறுதியெனும்*
*பெற்றியை யறிந்தாரேல்—மானம்*
*துறந்தற மறந்தும் பின் னுயிர்கொண்டுவாழ்வது*
*சுகமென்று மதிப்பாரோ ?*

*வந்தேமாதரமென்று வணங்கிய பின்*
*மாயத்தை வணங்குவாரோ*
*வந்தேமாதர மொன்றே தாரக*
*மென்பதை மறப்பாரோ ?*

என்று வீர சுதந்திரத்தை வேண்டி ஏங்கிநின்ற மக்களுக்கு ஆங்கிலேயர் பசப்பு வார்த்தைகள் கூறி மயக்கப் பார்த்த போது பாரதியார் வெருண்டெழுந்து பாடிய பாடல்களுள் இதுவும் ஒன்றாகும்.

இதுமட்டுமா ? ஆங்கிலேயர் ஒரு தேசபக்தனுக்கு கூறுவது போலவும் தேசபக்தன் ஆங்கிலேயனுக்கு வீராவேசத்துடன் மறுமொழி கூறுவது போலவும் பாடப்பட்ட பாடல்கள் இன்றும் பல மக்களால் விரும்பிப் படிக்கப்படுகின்றன. 'இந்தியா' பத்திரிகை நடத்தும் பொழுதுதான் பாரதியாரின் வீரமும், ஆவேசமும் நிறைந்த பாடல்கள் வெளியாயின. ஆங்கிலேயரின் வெளிப்பகட்டைக் கண்டு மயங்கியோரை வைது பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சி லுரமு மின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி—கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி !

சிந்தையிற் கள் விரும்பிச்
சிவசிவ வென்பதுபோல்
வந்தே மாதரமென்பார்—கிளியே
மனதில் அதனைக் கொள்ளார்.

சொந்தச் சகோதரர்கள்
துன்பத்தில் காதல் கண்டும்
சிந்தையிரங்காரடி—கிளியே ;
செம்மை மறந்தாரடி !
பஞ்சத்தும் நோய்களிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத் தம் கண்ணுற் கண்டும்—கிளியே ;
சோம்பிக் கிடப்பாரடி !
தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா—கிளியே !
வந்தே மாதர மென்பார் !

தமிழ் நாட்டில் தேசிய ஆவேசத்தை ஊட்டி வந்த பாரதியாரின் "இந்தியா" எனும் பத்திரிகையை அடக்குமுறை நாகம் சீறி முற்றுப் புள்ளியிட்டது. இந்தியாப் பத்திரிகை நின்றுவிட்ட பிறகு, பாரதியாருக்குப் புதுவை வாசம் சற்றும் களிப்பாயில்லை. மனத்திலே சஞ்சலம், தீராத பணக் கஷ்டம், வாழ்விலே ஏமாற்றம் இத்தனையும் சேர்ந்து வேதனைப்பட்டார். ஆனால் புதுவை வாழ்க்கையைப் பாரதியாரின் ஜீவியத்திலேயே மிக முக்கிய காலமாகக் கொள்ள வேண்டும். புதுவையிலேதான் அவருடைய தேசீய கீதங்களுக்குப் பதிலாக, உருக்கமான ஸ்தோத்திர கீதங்களும், வேதாந்த இலக்கிய ரசனைக் கவிக் கவிதைகளும் அதிகமாய் உதிக்கலாயின. பாரதியாரின் வாழ்க்கையில் கனவும், பக்குவமும், ஞான முதிர்ச்சியும் அனுபவத்திண்மையும், வேதாந்த திருஷ்டியும், வாழ்க்கையின் கஷ்டங்களுக்கு நடுவில்தான் பரிணமிக்கலாயின.

பாரதியார் ஒரு வரகவி. ஒரு சிறு மலர் தொட்டு, உலகைக் கலக்கும் பெரு நிகழ்ச்சிகள் வரையில் எதுவும் அவர் மனதைக் கிளறி விடுகிறது.

"பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப்
பாலித்திட வேண்டும்."

என்று ஆசைப்படும் பாரதியார் அந்தச் சக்தியைப் பெற்றிருந்தார். பாரதியாரின் குழந்தையான 'சகுந்தலா' ஒரு முறை மாடிப் படியினின்றும் தவறி விழுந்து விட்டது. இதைக் கண்டு மனம் குழைந்து "ஓடி விளையாடு பாப்பா" என்று தொடங்கும் அற்புதமான நீண்ட பாட்டொன்றினைப் பாடிவிட்டார். அன்று தன் குழந்தைக்காகப் பாடிய பாட்டுக்கள் இன்று தமிழ் நாட்டுப் பாப்பாக்களின் உரித்தாகி விட்டன. பாரதியாரின் வாழ்க்கை ஒரு இலட்சிய வாழ்க்கையாகவே அமைந்திருந்தது. எல்லோரிடத்தும் அவர் கள்ளங் கபடமின்றி நடந்து வந்தார். அவரது உள்ளம் குழந்தையுள்ளம் போன்றது,

"**உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே யொளி யுண்டாகும்**" என்று பாரதி பாடியதற்கு அவரே சான்றாவர். தேசத்தின் மீதும், தாய் மொழி மீதும் அவர் கொண்டிருந்த பக்தி அளவிட முடியாதது. பாரத நாட்டு மக்களின் பிற்போக்குச் சக்திகளைக் கண்டு வருந்தினர். முக்கியமாகப் பெண்களை அவர்கள் நடத்திய விதமும், தாழ்ந்தவர்கள் என அவர்களை ஒதுக்கி வைத்த முறையும் பாரதியாருக்குக் கோபத்தை மூட்டின. அவற்றோடு நில்லாமல் சுதந்திரம் பெறுவதற்கு நடக்க இருந்த போரில் பெண்கள் பங்கு பற்றுதல் நல்லதல்ல என்று எதிர்வாதம் பேசியவர்களை பதில்கவி புனைந்து கடிந்தார். பெண் ஆணுக்கு என்ன வகையில் குறைந்தவள்? அறிவில் குறைந்தவளா? இல்லை நாட்டிற்கு அல்லது வீட்டிற்குச் செய்யும் பணியில் குறைந்தவளா? ஏன் நம் நாட்டு மூடமக்கள் தம் பெண்டிரை வீட்டுக்குள் பூட்டி அடைத்து வைக்கின்றனர்? நம் பெண்மக்கள் தாய், சிவ சக்தியின் சொரூபங்களல்லவா? இப்படிப் பல புதுமையான எண்ணங்கள் அவர் மனதில் உதிக்கலாயின ! அவருடைய எண்ணங்களாகிய வண்ண மலர்கள் கவிதா மாலையாகத் தொடுத்து நின்றன !

அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் யாவினு மேம்பட்டு மானிடர்
நேர்மைகொண்டுயர் தேவர்களாதற்கே

சிறியதொண்டுகள் தீர்த்தடிமைச் சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்
நறிய பொன்மலர் மென்சிறு வாயினால்
நங்கை கூறு நவீனங்கள் கேட்டீரோ !

பாரதியாரின் புதுமைப் பெண், பெண்களைக் கீழினமாக நினைக்கும் மக்களுக்குப் பெண்ணால் ஏற்படும் நன்மைகளையும், சமஉரிமைகளைக் கொடுப்பதால் ஏற்படும் நன்மைகளையும் மேலும் விளக்குகிறாள்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்
நல்லறத்தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்
நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீரசுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மட்டுமல்ல, தான் விரும்பும் புதுமைப் பெண் தெய்வம் எப்படி இருக்க வேண்டும் எனக் கற்பனை பண்ணுகிருர். தமது, கற்பனையில் உதித்த பெண் தெய்வத்தை போற்றி! போற்றி! என்று தெய்வத்தை வரவேற்கிருர்போல் வரவேற்கும் விதத்தைப் பெண்களாகிய நாம் கேட்டு மகிழ வேண்டாமா?

போற்றி போற்றியோராயிரம் போற்றி நின்,
பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றி காண்!
சேற்றிலே புதிதாக முளைத்ததோர்
செய்ய தாமரைத் தேமலர் போலொளி
தோற்றி நின்றனை பாரத நாட்டிலே
துன்ப நீக்கும் சுதந்திர பேரிகை
சாற்றி வந்தனை மாதரசே யெங்கள்!
சாதி செய்த தவப் பயன் வாழி நீ!

என்று வாழ்த்துப் பா இசைக்கிருர். இவர் கன்னிப் பெண்களின் விடுதலைக்கு மட்டும் பாடுபடவில்லை. குழந்தையிலிருந்து கன்னியாகி, பின் மனைவியாகி, தாயின் ஸ்தானத்தை அடையும் பெண்கள் அத்தனை பேரினுடைய விடுதலைக்காகவும் பாடுபட்டிருக்கிருர்.

இவ்வுலகத்தைப் படைக்கும் சக்தி தாய் தானே? அப்படி இருந்தும் இவ்வாறறிவு பெற்ற மாந்தர் ஏன் தாயை அடிமைப் படுத்துகின்றனர்? பெண்மையின் மாண்பை, தாயின் உயர்வை இம் மக்கள் ஏன் உணருகிருர்கள் இல்லை. இப்படித் தனக்குத் தானே யோசிக்கிருர் பாரதியார். அவருடைய அச்சிந்தனையே, கேள்விகளே பாட்டாக மிளிருகின்றன!

பெண்டாட்டிதனை அடிமைப்படுத்த வேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
கண்டார்க்கு நகைப் பென்னும் உலக வாழ்க்கை
காதலென்னுங் கதையிடைக் குழப்பமன்றே?
உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவள்ளி என்றறியீரோ? உணர்ச்சி கெட்டீர்!
பண்டாய்ச்சி ஔவை "அன்னையும் பிதாவும்"
பாரிடை முன்னறி தெய்வம் மென்றுளன்றே
தாய்க்குமேல் இங்கோர் தெய்வமுண்டோ?

தாய்பெண்ணே யல்லளோ? தமக்கை, தங்கை
வாக்குப் பெண்மகளெல்லாம் பெண்ணேயன்றே!
மனைவியொருத்தியை அடிமைப் படுத்த வேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ
தாயைப்போலப் பிள்ளை யென்று முன்னோர்
வாக்குளதன்றே? பெண்மை அடிமை யுற்றால்
மக்களெல்லாம் அடிமையுறல் வியப்பொன்றாமோ?

என வாகவி பாரதியார் கேட்கின்றார். ஆனல் தற்போதைய பெண்களுக்கு ஒரு வார்த்தை! பாரதியார் தன்னுடைய சமூக சூழ் நிலையில், அதாவது பெண் அடிமைப் பட்டிருந்த காலத்தில் பாடிய பாடல்கள் இவை. ஆகவே இப்பாட்டுக்களின் உட்கருத்தை நாம் ஆராய்ந்து அதன்படி நடக்க வேண்டும். இவ் விடத்தில் காந்திமகான் ஒரு முறை பெண்கள் சபையில் கூறியதை ஞாபகப்படுத்தல் நல்லது. அவர் கூறியது யாதெனில் ஆணும், பெண்ணும் சம உரிமையுடன் வாழ வேண்டும். ஆணைப் போல் பெண்ணும் வேலை பார்க்கலாம். ஆனல் அவள் ஓர் ஆணுடன் போட்டியிடக் கூடாது. ஆணுக்குத் துணையாக இருந்து அவனுக்கு உதவி வேலை செய்ய வேண்டுமே ஒழிய அவன் செய்யும் வேலைக்குப் போட்டி போடக் கூடாது. அப்படிச் செய்தால் பெண்ணானவள் தான் கெடுவதுடன் மற்றவர்களையும் கெடுப்பது போலாகும். இது காந்தியின் வாக்கு மொழி. ஆகவே தற்காலத்துப் பெண்ணானவள் பாரதியாரின் வெளிச் சொற்களின் கருத்தை மட்டும் எடுக்காமல், உட்கருத்தையும் நாடிப் பின்பற்ற வேண்டும். பாரதியின் பாடல்களைப் படித்து விட்டு, வீட்டு வேலை செய்வது அழகல்ல" என்று நினைப்பது பாரதியின் கொள்கைக்கு முரணாகும். அவருடைய பாட்டுக்களுக்குப் பிழையான அர்த்தத்தைத் தெரிவது போலாகும்.

பாரதியார் பெண்குலத்திற்குத் தேடித் தந்திருக்கும் பெருமைகளும், உயர்வுகளும் பல. தமது தாய் நாட்டின் சுதந்திரப் போரில் ஈடுபட்டிருந்த பாரதியார், அத்துடன் நில்லாது பெண்குலத்திற்காகவும் பாடு பட்டது நம் பாக்கியமன்றே. ஆகவே நாம் அவருடைய பெயரைக் கூறி நம் விடுதலைக் கும்மியடித்துப் பாடி மகிழ வேண்டும் அல்லவா?

கும்மியடி தமிழ் நாடு முழுதுங்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.

கற்பு நிலையென்று சொல்லவந்தாரிரு
கட்சிக்குமது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.

பட்டங்களாள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைக் காணென்று கும்மியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள் படைக்கவும், நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோமென்று கும்மியடி
சாதஞ் சமைக்கவும் செய்திடுவோம் தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடுவோம்
காதலொருவனைக் கைப்பிடித்தேயவன்
காரியம் யாவினும் கைகொடுத்தே
மாதரங்கள் பழமையைக் காட்டிலும்,
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி.

பெண்கள், பெண்கள் என்று பாரதியார் பெண்களின் முன்னேற்றத்திற்காக மட்டும் பாடுபடவில்லை. தனது நாட்டு மக்களிடம் என்னென்ன குறைகள் கண்டாரோ அவற்றையெல்லாம் போக்க வேண்டும் என எண்ணிப் பாடுபட்டார். பாரதியின் கவிதா ஓவியங்களிலிருந்து எழுந்த கதாநாயகிகளும், கதா நாயகர்களும் பலர். அவருடைய பாடல்களைப் படிக்கும் போது அவர்கள் நம்முன் உயிர்பெற்றெழுந்து நடமாடுவது போன்ற உணர்ச்சி ஏற்படுகின்றது. பாரதியினுடைய 'புதுமைப் பெண்ணுடன் நாம் சற்று முன் சிறிது நேரம் குலாவினோம். இதோ! யாரது? நம்மை நோக்கி வருவது? பாரதியின் கவிதைகளிலிருந்து கண்ணீர் மல்கும் வதனத்துடன் புத்துயிர் பெற்று எழுந்து வரும் நங்கை யாராயிருக்கலாம்? நமது தமிழன்னை போலிருக்கிறதே! அவள் கண்ணீர் விடுவதற்கான காரணத்தை நாம் போய் அறிவோமா?

ஆதிசிவன் பெற்று விட்டான்—என்னை
ஆரியமைந்தன் அகத்திய னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்
இன்றொரு சொல்லினைக் கேட்டேன்—இனி
ஏது செய்வேன் என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை இங்கு
கூறத்தகாதவன் கூறினன் கண்டீர்!

புத்தம் புதிய கலைகள் மேற்கே வளருகின்றன. அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை. சொல்லவும் கூடுவதில்லை. அவை சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை. மெல்லத் தமிழ் இனிச்சாகும். அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்". என்று ஓர் பேதை கூறினான்.

என்றந்தப் பேதை உரைத்தான் —ஆ!
இந்த வசை எனக்கெய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத்திக்கும் —கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!

பாரதி கண்ட தமிழன்னையுடன் அளவளாவும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இது மட்டுமல்ல: நாம் விரும்பினால் அவர் கண்ட கண்ணனையோ, கண்ணம்மாவையோ வெவ்வேறு உருவங்களில், வெவ்வேறு கோணங்களிலிருந்தும் பார்க்கலாம். கண்ணனைத் தோழனாகவும் தாய், தந்தையராகவும் சேவகன், அரசன், சீடன், சற்குருவாகவும், காலனாகவும், காந்தனாகவும், ஆண்டானாகவும் கண்டார் பாரதியார். இவர்களையெல்லாம் நாம் இச்சிறு பொழுதிற்குள் சந்தித்துப் பேசமுடியாது. ஆனாலும் அங்கே நின்று கண்ணனைக் காதலனாகக் கொண்டு நினைந்துருகும் பெண்ணைச் சிறிது மறைவில் நின்று கவனிப்போம்.

தூண்டிற் புழுவினைப் போல் —வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக —எனது
நெஞ்சம் துடித்ததடி:

கனவு கண்டதிலே —ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை —எவனோ
என்னகம் தொட்டுவிட்டான்.

வினவக் கண்விழித்தேன் —சகியே
மேனி மறைந்துவிட்டான்
மனதில் மட்டிலுமே புதிதோர்
மகிழ்ச்சி கண்டதடி:

எண்ணும் பொழுதிலெல்லாம் அவன்கை
இட்ட இடத்தினிலே
தண்ணென்றிருந்ததடி —புதிதோர்
சாந்தி பிறந்ததடி,

எண்ணியெண்ணிப் பார்த்தேன்—அவன்தான்
யாரெனச் சிந்தை செய்தேன்
கண்ணன் திருவுருவம்—அங்ஙனே
கண்ணின் முன் நின்றதடி:

இவை மட்டுமல்ல, பாரதியாரின் பாப்பாப் பாட்டு, முரசுப் பாட்டு, ஆத்திசூடிப்பாட்டு முதலியன சிறுவர்களின் உள்ளத்தைக் கவர வல்லன. தோத்திரப் பாடல்கள் பாடுமிடத்தும் புதிய முறையில் கவிநயம் தோன்ற மிகவும் ஆற்றலோடும் வேகத்தோடும் பாடியிருக்கிறார்கள். "பாம்பறியும் பாம்பின்கால்" என்பது ஒரு பழமொழி. இதுபோலவே, ஒரு கவிஞரின் பெருமையை மற்றொரு கவிஞர் சொன்னால் மிகவும் பொருத்தமாக இருக்குமல்லவா? கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பாரதி பாடல்களைக் குறித்துப் பாடியுள்ள கவிதைகளையே பாரதியாரின் பெருமைகளையும், அவரது ஒப்பற்ற பணியின் மேன்மைகளையும் ஒரு கிராமவாசியின் வாய்மொழியாகப் பார்க்கலாம். கவிமணி எடுத்த எடுப்பிலேயே, "பாட்டுக் கொரு புலவன் பாரதியடா" என்று ஆரம்பிக்கிறார். அப்பாடலில் பாரதி பாடல்களின் சொல்லழகு, பொருளழகு, ஓசையினிமை ஆகியனவற்றைப் பாராட்டியுள்ளார் கவிமணி.

(30 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமும் தேசீய வைத்தியமும்

(15 ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வதற்கும், அதற்கேற்றவாறு பல்வேறு ரோகத் தன்மையிலுள்ள பிணிகளை நீக்குவதற்கும் பயன்படும் பொருட்டும், "பிணியியற் சிகிச்சை" பிரகாரம் தகுந்த சிகிச்சாக் கிரமங்களைப் பிணியாளிக்கு அளிப்பதற்கும், விஞ்ஞான ரீதியில் அவ் வகைத் தகுதிவாய்ந்த மருந்துகளை மேலும் ஆராய்ச்சி செய்வதற்கும் உதவியாவதன் பொருட்டும், பிணிகளை தகுந்த ஆராய்ச்சி மூலம் தவறிடாது கணிப்பதற்கும் ஆரம்ப விஞ்ஞான சாத்திரங்களாகிய பௌதிகம், (Physics), இரசாயனம் (Chemistry), தாவரசாத்திரம் (Botany), பிராணிவர்க்க சாத்திரம் (Zoology), உடற்கூறு சாத்திரம் (Anatomy), உடலியல் (Physiology), பிணியியல் (Pathology), நுண்ணியல் (Bacteriology), முதலானவற்றையும் சேர்த்து தற்போதைய மாணவர்களுக்குக் கல்வி பயிற்றப்படுகின்றது. இவ்வாறு மேல்நாட்டு விஞ்ஞான ரீதியான அத்தியாவசியமான பாடத்திட்டங்களையும் வகுத்து தேசீய வைத்திய மாணவர்களுக்குக் கற்பித்து வருவதனுல் சாதாரண குருசீடன் பரம்பரையாகக் கற்றுத் தேறும் மாணவர்களிலும் பார்க்க இக் கல்லூரியில் இதன் பாடத்திட்டத்தின்படி கற்றுத் தேறும் மாணவர்கள் திறமை வாய்ந்தவர்களாகவும் தகுதிமிக்கவர்களாகவும் ஆவதற்கும், தேசீய மருத்துவத்தை தற்பொழுதுள்ள கீழ்த்தரமான நிலையிலிருந்து உயர்த்துவதற்கும், பிணியாளர் தகுந்த சிகிச்சை பெறுவதற்கும் வசதியாயுள்ளன.

தற்பொழுது "தேசீய வைத்தியர்களின் வைத்தியப் பதிவு"ச் சட்டத்தின்படி தேசீய வைத்தியர்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களிடம் காணப்படும் குறைபாடுகளைத் திருத்தியமைப்பதற்காக சுகாதார மந்திரி அவர்கள் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களின் கௌரவத்தையும் தாரதம்மியத்தையும், அவர்களது ஒழுக்க நலன்களையும் கவனித்துக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு அதிகாரக் குழுவை (Registration Council) புதிய தேசீய வைத்திய திருத்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கு எத்தனித்துள்ளார். இக்குழுவானது பதிவு செய்யப்பட்ட வைத்தியரின் நிலைமையைச் சீர்திருத்துவதுடன் போலி வைத்தியர்கள் மேலும் தொடர்ந்து வைத்தியம் செய்யாதிருப்பதற்கேற்ற வழிவகைகளை வகுத்து ஆக்க வேலைகளைச் செய்யலாமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்தபடியாக அதே சீர்திருத்தச் சட்டமானது தேசீய மருந்துகளை ஆராய்ச்சி செய்வதற்கும் ஒரு அதிகாரக்குழுவை நியமிக்கலாமென நம்பப்படுகின்றது. தனிப்பட்ட மூலிகைகளை ஆராய்ச்சி செய்து அவற்றிலுள்ள பண்புகளை (Constituents) மாத்திரம் கண்டறிவதினுல் தேசீய வைத்தியம் விருத்தியடைய முடியாது. அத்துடன் இவ்வகையான ஆராச்சியானது இதுகாறும் தேசீய மருந்து மூலிகைகளில் பலவற்றை ஆங்கில பதார்த்த நூலில் (British Pharmacopoeia) சேர்த்துக் கொண்டது போல் மேலும் சேர்த்துக் கொள்ளவோ அல்லது செயற்கை முறையில் (Synthetic) அந்தமூலிகையிலுள்ள பண்புத் தொகுதிகளைத் தொகுத்து மருந்துகளாக்கி மேல்நாட்டு வைத்தியமுறைப் பதார்த்தங்களின் தொகுப்பில் சேர்த்துக்கொள்ளவோ உதவியளிக்குமல்லாது எவ்வகையிலும் தேசீய மருத்துவத்தின் பதார்த்தத் தொகுப்பை விருத்தி செய்ய வழிவகுக்காது என்று பல தேசீய வைத்திய நுணுக்க ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.


அவர்களது அபிப்பிராயப்படி நோக்குமிடத்து தேசீய மருத்துவத்தில் பெரும்பான்மையான மருந்துகள் கூட்டுப்பதார்த்தங்களின் மருந்துகளாகவே காணப்படுகின்றன. அக்கூட்டுப் பதார்த்த மருந்துகளை விஞ்ஞான ரீதியில் பூரணமாகப் பரீட்சை செய்து அவற்றின் பலாபலன்களையோ கூட்டுப் பண்புகளையோ அறியக்கூடிய நிலைக்கு தற்கால விஞ்ஞானம் முன்னேற்றமடையவில்லை. இவ் வகைக் கூட்டு மருந்துகளை பிணியியற் சிகிச்சைக் கிரம ஆராய்ச்சி (Clinical Research) மூலமே ஆராய்ந்து உண்மை காண்பது இலகுவாகலாம். அதாவது குறிக்கப்பட்ட செய்கையும் குணமும் காணப்படும் கூட்டுப் பதார்த்தங்கள் சேர்ந்த ஒரு மருந்தை, குறிக்கப்பட்ட ஒரே பிணியினுல் வருந்தும் பல நோயாளருக்குக் கொடுத்து, அவர்களது அன்றாட விருத்திகளைக் குறித்து வருவதுடன் இறுதியில் அம் மருந்தின் பலாபலன்களையும் குறித்து அதன்பேறாக ஏற்படும் நன்மைகளை இதர மருத்துவர்களும் அறியும் வண்ணம் வெளியிடுவதே தேசீய வைத்திய வளர்ச்சிக்கு ஏற்ற முறையாகுமென வைத்திய வல்லுனர் அபிப்பிராயம் தருகின்றனர்.

இன்று யாவரும் எதிர்பார்க்கும் சுகாதார மந்திரி அவர்களது தேசீய வைத்தியச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் தேசீய வைத்தியப் பகுதிக்கென ஒரு காரியாதிகாரியை (Commissioner) நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதுடன் இவ்வருடத்திய வரவு செலவுத் திட்டத்தில் இலங்கையின் முக்கிய பகுதிகளில் மூன்று தேசீய வைத்தியசாலைகளும் இருபத்தி

(28 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுநாயக்காவும் கைமாறியது



கட்டுநாயக்கா விமானநிலையம், இலங்கைக்குக் கையளிக்கப்பட்ட வைபவத்தில் பிரதமர் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட காட்சி.

"கட்டுநாயக்கா விமான நிலையத்தை இலங்கை மீண்டும் ஏற்றுக்கொள்வது எமது நாட்டின் சரித்திரத்தில் மற்றோர் முக்கிய நிகழ்ச்சி" என்று கட்டுநாயக்கா விமான நிலையத்தை இலங்கையின் கையில் ஒப்படைப்பதற்காக நடைபெற்ற வைபவத்தில் இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா குறிப்பிட்டார். "இந் நிகழ்ச்சி பற்றி வரலாற்று எடுகளில் குறிப்பிடும் போது பிரிட்டிஷ் அரசாங்கம் தான் நீண்டகாலம் அதிகாரம் செலுத்தி வந்த பல நாடுகளில் கண்ணியத்துடனும், நல்லெண்ணத்துடனும், சிநேகப் பான்மையுடனும் அந்நாட்டு மக்கள் கையில் அதிகாரத்தை மீண்டும் ஒப்படைத்த விஷயம் முக்கியமாகக் குறிக்கப்படும்" என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

பிரதமரின் சொற்பொழிவுக்குமுன் பிரிட்டிஷ் விமானப் படையின் கொடி இறக்கப்பட்டு இலங்கை விமானப்படையின் கொடி ஏற்றப்பட்டது.

அவர் மேலும் பேசியதாவது :—

இப்படிப்பட்ட விஷயங்களை நாம் சிநேக பூர்வமாகப் பேசிக் கண்ணியமாகத் தீர்க்கக் கூடியதாயிருப்பது நல்லதோர் அறிகுறியாகும். பொதுநலவமைப்பில் பிரிட்டன் உட்பட சகல தேசங்களுடனும் சம அந்தஸ்துப் பெற்றிருக்கும் நாம் முக்கியமான பல பிரச்சினைகளைச் சுதந்திரமாகத் தீர்த்திருக்கிறோம். சமாதானத்தை நிலைபெறச்செய்து சந்தோஷ சுபீட்ச வாழ்வை அடைதற்காக உலகில் பரஸ்பர நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் வளர்க்கும் பணியில் நாமும் பங்குகொண்டிருக்கிறோம்.

இலங்கையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஹைகொமிஷனராக இருக்கும் திரு. டி. எல். குரொஸ்த்வெயிட் பிரதமருக்கு முன்னர் பேசுகையில் பிரிட்டிஷ் விமானப்படை இலங்கையின் வாழ்வில் வகித்து வந்த முக்கிய பங்கைப் பற்றிக் குறிப்பிட்டார். "1942 ஏப்ரல் மாதம் இலங்கைக்கு ஜப்பானியரால் நேரவிருந்த பேராபத்தைத் தடுத்தது பிரிட்டிஷ் விமானப்படையே யென்பதை நாம் மறக்கக்கூடாது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

கட்டுநாயக்கா கைமாறிய பின்னர் பிரிட்டிஷ் படை முன்னர் போல் முழு அதிகாரமும் உள்ள படையாக கட்டுநாயக்காவில் இருக்கமாட்டாதெனவும், இலங்கை விமானப் படையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு செயலாற்றிவரும் எனவும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெற்காணி மசோதாவில் செய்யப் பட்ட திருத்தங்கள்

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

ணப்பங்களும்) விவசாய, உணவு அமைச்சரால் நிய மிக்கப்பட்ட பரிசீலனைச் சபையால் ஆராயப்படும்.

**9. பிரமாணங்கள்**

நெற்காணிச் சட்டத்தின் பிரகாரம் செய்யப்படும் பிரமாணங்கள், அவை அமுலுக்குக் கொண்டுவர முன்னர் அரசாங்கத்தால் முதலில் அங்கீகரிக்சப் படும்.

**10. விவசாயக் கமிட்டிகள் அங்கத்துவம்**

ஒரு விவசாயக் கமிட்டியின் அங்கத்தவர்கள் கட மையாற்றும் காலம் 1 வருடமாகும்.

முன்னைய நகல் மசோதாவில் கடமையாற்றும் காலம் 3 வருடமெனவிருந்தது.

**11. காணியுள்ள பிரதேசத்தில் வசிக்காத காணிச் சொந்தக்காரர்களும் வாக்களிக்கலாம்**

ஒரு விவசாயக் கமிட்டிக்கு காணிச் சொந்தக் காரரை அங்கத்தரவாகத் தெரிந்தெடுப்பதில், காணி யுள்ள பிரதேசத்தில் வசிக்காத காணிச் சொந்தக் காரர்களும் வாக்களிக்கும் உரிமையுடையவராவர். எனினும், காணியுள்ள பிரதேசத்தில் வசிக்கும் சொந்தக்காரர்கள் மாத்திரமே அங்கத்துவம் பெறத் தகுதியுடையவராவர். விவசாயக் கமிட்டியின் மொத்த அங்கத்தவர்களில் 25 சதவீதமானவர்களே காணிச் சொந்தக்காரர்களாயிருக்கலாம்.

முன்னைய நகல் மசோதாவில் காணியுள்ள பிர தேசத்தில் வசிக்கும் சொந்தக்காரர்கள் மாத்திரமே வாக்களிக்க உரிமையுடையோரென இருந்தது. திருத்த மசோதாவில் காணிச் சொந்தக்காரர் இலங் கைப் பிரசைகளாயிருப்பின் அவர்கள் காணியுள்ள பிரதேசத்தில் வசிக்காவிட்டாலும் வாக்குரிமையுடைய வராயிருக்கச் சந்தர்ப்ப மளிக்கப்பட்டிருக்கின்றது.

**12. கூட்டத்தைக் கூட்டுவதற்கான காரணம்**

விவசாயக் கமிட்டியின் அங்கத்தவர் ஒருவரின் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்கள் விவ சாயிகளின் கூட்டமொன்றைக் கூட்டலாம். கூட்டத் தைக் கூட்டுதற்கு விதிக்கப்பட்ட தொகையினர் கைச் சாத்திட்டு விவசாயக் கமிட்டியின் தலைவருக்கு வேண்டு கோள் அனுப்புவதன்பேரில் கூட்டம் கூட்டப்படலாம். முன்னைய நகல் மசோதாவில் வாக்கு அளிப்பவர் களுக்கு இத்தகைய உரிமை இருக்கவில்லை.

## பாரதியும் பெண்களும்

(23 ம் பக்கத் தொடர்ச்சி)

*பாப்பாப் பாட்டிலே—நெஞ்சைப்*
*பறிகொடுத்தேனடா*
*சாப்பாடேதுக்கடா ?—சீனி*
*சர்க்கரை ஏதுக்கடா ?*

*செந்தமிழ் நாட்டின்—முதல் மொழி*
*செவியில் சேருமுன்னே*
*அந்தமில்லாமல்—உளத்தில்*
*அமுதமூறுமடா !*

*வந்தே மாதரத்தைப்—பாடவே*
*வாய்திறந்தவுடன்*
*சந்தேகமில்லை—ஒரு புதுச்*
*சத்திதோன்றுதடா*

*சுதந்திரப் பாட்டில்—உள்ளம்*
*துடி துடிக்குதடா !*
*பதமெழும்புதடா—கையும்*
*படபடக்குதடா !*

என்று இவ்வாறு தனித் தனியாகப் பாரதி பாடல்க ளின் தன்மையைச் சிறப்பித்துத் தமது எண்ணத்தைத் தெரிவித்துள்ளார். பாரதியார் சிறந்த கவிஞர் மட்டு மல்ல. அவர் சிறந்த கட்டுரையாளர், கதாசிரியர், சிறந்த பேச்சாளர். இவ்வாறு பல வகையில் சிறந்து விளங்கினர். பாரதியாரின் வசன நடையே ஒரு தனிப் பட்ட நடை. பேச்சு வழக்கிற்கு ஒத்த நடை. வாசித்துக் கொண்டு செல்லும்போதே நடையழகின் சிறப்பினல் கருத்துக்கள் நன்ருகத் தெரிந்து விடும். கவிதை களிலே கட்டுரை, கதை முதலியவை ஏராளமாக உள் ளன. பாரதியார் எழுதின யாவும் என்றும் இறவாத நித்தியத் தன்மை பெற்று விட்டன. பாரதியாரும் அமரகவியாக என்றென்றும் நம்மிடையே விளங்கு வார் என்பதற்கையமில்லை.

## "நேற்று இன்று நாளை"

(13 ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை முழுவதற்கும் உணவளித்து
ஏற்றி அயல் நாட்டவர் பசி தவித்து
இலங்கு தங்கக் குவியல் கொண்டு வந்தனர் ;
இவர்கள் சிறப்பு நிலை இன்று கண்டனர்.
இவர்கள் சிறப்பு நிலை இன்று போலவே,
என்றும் நிலை பெறுக என்று வாழ்த்திஞேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுநிலைமைக் கொள்கையைப் பிரதமர் விளக்குகிறர்

### உலக விவகார இந்தியச் சபையில் ஆற்றிய பேருரை

சமீப காலத்தில் சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக் கொண்ட ஆசிய நாடுகள், கலப்பட பாசிஸத்துக்கும் கலப்பட கம்யூனிசத்துக்குமிடையில் அசௌகரியமான முறையில் அலைக்கழிவதைத் தவிர்க்க வேண்டுமாஞல், புத்துலகின் தேவைகளுக்கிணங்க அவை தம் ஜனநாயக அமைப்பைப் பண்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா புதுடில்லியில் கூறிஞர்.

உலக விவகாரங்கள் பற்றிய இந்தியச் சபையில் "ஆசிய நாடுகளில் ஜனநாயகத்தோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்" என்ற பொருள் பற்றிப்பேசிய திரு. பண்டாரநாயக்கா அவர்கள் மேலும் கூறியதாவது :—"ஆசிய ஜனநாயக நாடுகளை இரு பெரும் பிரச்சினைகள் எதிர்நோக்கியிருக்கின்றன. முதலாவது, குடியேற்ற நாட்டு சமுதாயத்தை சுதந்திர சமுதாயமாக்குவதெப்படி என்பதும், இரண்டாவது, சுதந்திர சமுதாயத்தை, மாறிவரும் உலகச் சூழ்நிலையில் உருவாக்குவ தெப்படி என்பதுமாகும். இன்று எல்லா ஜனநாயக நாடுகளையும் எதிர் நோக்கியிருக்கும் உண்மையான பிரச்சினை கூட்டுச் சுதந்திரத்துக்கு முக்கியத்துவமளிப்பதோடு தனிப்பட்டவர் சுதந்திரத்திற்கும், கூட்டுச் சுதந்திரத்திற்குமிடையே ஒற்றுமையையும் சகஜ நிலையையும் ஏற்படுத்துவதாகும்.

"ஆசிய ஜனநாயக ஆட்சிமுறையை "நிர்வாக முறை" யெனக் குறிப்பிடலாம். பாராளுமன்ற அங்கத்தினர்களெல்லோருக்கும், அவர்கள் எக்கட்சியைச் சேர்ந்தபோதிலும், நிர்வாகத்தில் பங்குண்டு. பெரும்பான்மைக் கட்சியினருக்கு நிர்வாகத்தில் பெரும்பங்கு உண்டாவது இயற்கையே."

இவ்வித ஆட்சி முறையில் 1946 ம் ஆண்டு முதல் கடந்த பத்து வருடங்களாக இலங்கை பரீட்சை நடத்தி வருவதை பிரதமர் நினைவூட்டிஞர். இத்தகைய ஜனநாயக ஆட்சிமுறையில் கட்சி முறை அழிக்கப்பட்டது. கட்சியின் விருத்தியிலும் பார்க்க, நாட்டின் அபிவிருத்தியிலேயே அதிக கவனஞ் செலுத்தப்படும் என அவர் கூறிஞர்.

உலகில் இருபது அல்லது இருபத்தைந்து வருடங்களுக்கிடையில், மனித சமுதாயத்தை அழிக்கும் கோர யுத்தமொன்று மூளாவிட்டால் ஜனநாயக சோஷலிச ஆட்சிமுறை யொன்று தோன்றுமென்றும் அது ஜனநாயகத்திற்கும், சர்வாதிகாரத்துக்கும் இடைப்பட்ட சரியான மத்திய வழியைப் பின்பற்றுமென்றும் அவர் கூறிஞர். அவர் மேலும் கூறியதாவது :—

"புதிதாக உருவாகிய ஆசிய சுதந்திர நாடுகள், அவ்வந்நாட்டின் கலாச்சார, பாரம்பரிய சம்பிரதாயங்களையும் உதறித்தள்ளிவிடாது, குடியேற்ற நாட்டு சமுதாயத்திலிருந்து சுதந்திர சமுதாயத்தை உருவாக்கும் பொழுது நடுநிலைமைக் கொள்கையும், சகஜீவனக் கொள்கையும் தோன்றின.

"நாம் எந்த ஒரு வல்லரசுக் கோஷ்டியுடனும் சேர்ந்து விட மாட்டோம். நாங்கள் கீழைத் தேயத்திலிருந்தாலும் சரி, மேலைத் தேயத்திலிருந்தாலும் சரி, கம்யூனிச முறையிலிருந்தாலும்சரி, முதலாளித்துவ முறையிலிருந்தாலும்சரி, நமது புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு, பிரயோசனமுள்ளதும் இலாபகரமானதுமான எதனையும் பெற்றுக்கொள்ளத்தக்க சுதந்திரத்துடன் வாழ விரும்புகின்றோம்.

"நடுவு நிலைக்கொள்கைக்கும், சகஜீவனக் கொள்கைக்கும் நடுநாயகமாக விளங்கும் தத்துவம் இதுவாகும். இதனையே உங்கள் நாடு பின்பற்றுகின்றது. தற்பொழுது எனது நாடும் இத்தத்துவத்தையே பின்பற்றுகின்றது".

---

## சோஷலிசத்துக்கேற்ற கல்விமுறை வேண்டும்

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை, நாட்டின் நிர்வாகத்தைத் தேசீய மொழியில் நடாத்துதலாகும். இக்கொள்கையை அமுல் நடத்த நாம் இப்பொழுது முயன்றுவருகிறோம். அதே சமயத்தில் தேசீய ஒற்றுமையைப் பேணுதற்கும் கல்வியின் தரத்தைக் குன்றுது பாதுகாத்தற்கும் ஆவன செய்துவருகின்றோம்.

"இன்று நமது நாட்டில் நிலவும் சமுதாயமுறை பதினைந்து வருடங்களின் முன்னர் இலங்கையில் நிலவிய சமுதாய முறையினும் முற்றிலும் மாறுபட்டது. சோஷலிஸத்தை நோக்கி நாம் முன்னேறி வருகிறோம். புதிய சூழ்நிலைகளில் மக்கள் இன்பமாக வாழ்வதற்கு ஏற்ற கல்வியை அவர்களுக்கு அளிக்கத்தக்க ஒரு கல்வித் திட்டத்தை, அவர்களது திறமைகளை நாட்டின் முன்னேற்றத்துக்கு நன்கு உபயோகிக்கப்படும்படி செய்யக்கூடிய ஒரு கல்வித் திட்டத்தை நாம் உருவாக்க வேண்டியிருக்கிறது.

"மேலும் எமது தேசீய உணர்ச்சி குறுகியதாக இருக்கக்கூடாது. சர்வதேச உணர்ச்சியை நாம் வளர்க்க வேண்டும். பரந்த மனப்பான்மை உடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | விலை ரூ. ச. | | தபாற் செலவு சதம் |
|---|---|---|---|
| 1. இலங்கைக் கல்வி முறைச் சீர்திருத்தம் சம்பந்தமாய ஆலோசனைகள் .. .. .. | 55 | .. | 10 |
| 2. அரசாங்க பாஷைக் கொமிஷனின் நான்காவது இடையறிக்கை .. | 50 | .. | 15 |
| 3. அரசாங்க பாஷைக் கொமிஷனின் ஐந்தாவது இடையறிக்கை .. | 1.20 | .. | 35 |
| 4. இந்து ஆலயங்களும் தரும நம்பிக்கைச் சொத்துகளும் .. | 70 | .. | 15 |
| 5. இந்து மத அறநிலையங்கள், ஆதீனங்கள் முதலியவை பற்றிய விசேஷ விசாரணைச் சபையின் அறிக்கை 1951 ம் ஆண்டு ஜூன் மாதம் .. .. .. | 2.00 | .. | 35 |
| 6. இலங்கைக் குடிமதிப்பு—1946 .. .. .. | 5.00 | .. | 35 |
| 7. 6 ம், 7 ம், 8 ம் வகுப்புகளில் கல்வியூட்டும் மொழிகளாக தேசிய மொழிகளை இலகுவில் அமைத்துக்கொள்வதற்கான சிபார்சுகளைச் செய்தற்கு நியமிக்கப்பட்ட சபையின் அறிக்கை .. | 1.45 | .. | 35 |
| 8. இலங்கை அரசியற் சீர்திருத்த விசாரணைச் சபையின் அறிக்கை—1945 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் .. .. | 2.00 | .. | 35 |
| 9. சுகாதார சேவைகளின் பதில் அதிபரது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. .. .. | 1.55 | .. | 35 |
| 10. குடிமதிப்பு புள்ளிவிபர தற்காலிக அதிபரினது 1953 ம் வருட நிர்வாக அறிக்கை .. .. .. | 60 | .. | 20 |
| 11. இலங்கைப் பறவைகள்—சித்திரசகித நூல் .. .. | 5.00 | .. | 35 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர்,

தபால் பெட்டி நிர். 500,

கொழும்பு 1.

என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற்பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org